விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 86 ஆவணி 16 ஜூலைகஜ் 4 இதழ் 199
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1-9-84

## ஜனாதிபதி - சத்வால் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால் கடந்த வியாழக்கிழமை இரவு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவைச் சந்தித்தார்.

இச்சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

ஸ்தானிகர் திரு. சத்வால் வட்டமேசை மகாநாட்டில் இரண்டாவது சபை அமைப்பது பற்றிய விடயங்களை பிரஸ்தாபித்ததுடன் இம்மகாநாட்டில் இந்தியா கொண்டிருக்கும் அக்கறையையும் திரு. ஜயவர்த்தனவிடம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

திரு. சத்வால் கடந்த வாரமும் பலதடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்து வட்டமேசை மகாநாடு பற்றிய நிலவரங்களை அறிந்து வந்தார். (கி)

## உயர்நிலை மாணவர் ஒன்றியம் அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

மன்னார் பிரதேசத்தில் உள்ள அடம்பன் கிராமத்தில் ஆயுதப்படையினரால் சேதமாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவியாக வடக்கு-கிழக்குப் பிரதேச மாணவர்களின் சமூக பொருளாதார-கல்வி மேம்பாட்டுக்கான 'உயர்நிலை மாணவர் ஒன்றியம்' அத்தியாவசிய உணவுப் பொருட்கள்

[8 ம் பக்கம் பார்க்க]

# பாடசாலை மாணவர்கள் முழு அளவில் பகிஷ்கரிப்பு!

## தனியார் கல்வி நிறுவனமும் வெறிச்சோடிக் காணப்பட்டது

### அசம்பாவிதம் எதுவும் இல்லை

( ஏ. வி. மாணிக்கம் )

பாடசாலை மாணவர்கள் தாக்கப்படுவதறகுக் கண்டனம் தெரிவித்தும், தங்களின் உயிருக்குப் பாதுகாப்புக் கோரியும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலைகளின் மாணவர்களும், மாணவிகளும் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் சுமார் ஐநூறு பாடசாலைகளைச் சேர்ந்த இரண்டு லட்சத்து இருபதினாயிரம் மாணவர்கள் நேற்றுப் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. கிளிநொச்சி மாவட்டத்திலும் சுமார் அறுபது பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் நேற்று வகுப்புகளுக்குச் செல்லாமல் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தனர்.

மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லாததால், யாழ்ப்பாண மாவட்டத்தில் எல்லாப் பாடசாலைகளுமே வெறிச்சோடிக் காணப்பட்டன மாணவர்களின் நலன் கருதி பாடசாலை மாணவர்களினால் முதற்தடவையாக யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் நடத்தப்பட்ட இந்தப் பகிஷ்கரிப்பு முழு அளவில் இருந்ததாகவும், பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த பாடசாலை மாணவர்கள் எந்தவொருகட்சியினதோ, இயக்கத்தினதோ தலையீடின்றி அமைதியான முறையில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

'மாணவர்களின் கல்விக்கும் உயிருக்கும் உத்தரவாதம் செய்; கைது செய்யப்பட்ட

(8ம் பக்கம் பார்க்)

## வெங்கட்ராமன் பதவியேற்பு

(புதுடில்லி)

இந்திய உபஜனாதிபதியாக திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று காலை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சத்தியப்பிரமாண வைபவம் புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் விமர்சையாக இடம் பெற்றது.

ஜனாதிபதி ஜியானி ஸெயில் சிங் முன்னிலையில் ராஷ்டிரபதி அசோக மண்டபத்தில் பத்து நிமிடங்கள்வரை இடம் பெற்ற இவ்வைபவத்தின் போது ஓய்வு பெறும் உப ஜனாதிபதி திரு ஹிதாயத் தொல்லா, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி முப்படைத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய உப ஜனாதிபதி பதவிக் காலம் ஐந்தாண்டுகளாகும். திரு. ஹிதாயத் தொல்லாவின் இப்பதவிக்காலம் முடிந்ததையடுத்து இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் இப்

(8-ம் பக்கம் பார்க்க)

## 4 தொகுதிகளில் இடைத்தேர்தல்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, பட்டிருப்பு ஆகிய தொகுதிகளுக்கான பாராளுமன்ற இடைத் தேர்தல் அக்டோபர் மாத ஆரம்பப் பகுதியில் இடம்பெறவுள்ளது. இவற்றுடன்குண்டசாலை, மின்னேரியா ஆகிய தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல்கள் இடம் பெறும்,

இத்தேர்தல் தொகுதிகளுக்கான வேட்பு மனுத்தாக்கல் செப்டெம்பர்மாதம் 27ந் திகதி இடம்பெறும். திருகோணமலை, பட்டிருப்பு ஆகிய இரு தொகுதிகளின் பாராளுமன்ற

[8-ம் பக்கம் பார்க்க]

## பிரேமானந்தாஜி சுவாமிகள் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

லண்டனிலிருந்து திரும்பியுள்ள பூபாலகிருஷ்ண ஆசிரமத்தின் ஸ்தாபகர், பிரேமானந்தாஜி சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இன்று, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் நடைபெறும் அதிகாலைப் பூஜையில் கலந்து கொள்ளும் சுவாமிகள்; பின்னர் சில சிறப்பு

[8-ம் பக்கம் பார்க்க]

## தபாலகம் மீது குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தபால் அலுவலகம் நேற்றுமுன்தினம் இரவு குண்டு வீச்சுக்கிலக்கானதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அங்கு ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை.

வடபகுதி தபால் அத்தியட்சகரும் பொலிசாரும் நேற்றுப் பிற்பகல் குறிப்பிட்ட தபால் அலுவலகத்துக்குச் சென்று விசாரணை நடாத்தினர். (மா)

## ● யாழ்ப்பாணத்தில் திடீரென—— அதிகரித்து வரும் கொள்ளைச் சம்பவங்கள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இப்பொழுது மீண்டும் கொள்ளைச் சம்பவங் ள் தலைதூக்கி உள்ளன.

தனியாரிடமும், ஸ்தாபனங்களிலும், வீடுகளிலும் கொள்ளைகள் உச்சக்கட்டத்தில் நடக்கின்றன!

நமது நிருபர்கள் நேற்று நடந்ததாக அனுப்பியுள்ள சில கொள்ளைச் சம்பவங்கள் இவை:-

### தெல்லிப்பழையில்

மாவிட்டபுரம் நிருபர் அறிவிப்பதாவது:

தெல்லிப்பழை ப. நோ. கூட்டுறவு சங்கத்தின் 3 கிளைகளிலும், ஒரு புடவை நிலையத்திலும் இனம் தெரியாத நான்கு இளைஞர்களினால் நேற்று சுமார் 4 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது!

நேற்றுப் பிற்பகல் 12-30 மணிக்கும் 1-30 மணிக்கும் இடையில் இந்த 4 கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த 4 இளைஞர்களே இந்த கொள்ளையை நடத்தியுள்ளனர்

கிளை 10-இல் ரூபா 1,877-77 சதம், அதன் புடவை நிலையத்தில் ரூபா 902-78 சதம், கிளை 33-ல் ரூபா 905-64 சதம் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்துக்கு முன்பாகவுள்ள கிளை 1-ல் ரூபா 394-80 சதம் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

இதற்கு முன்னர் காலை 10 மணியளவில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவிருந்த கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்திருக்கிறது. சங்க அலுவலகத்துக்குள் புகுந்த 5 இளைஞர்கள் காசாளரைத் தேடியதாகவும் அவர் அந்த நேரத்தில் வங்கிக்கு சென்று விட்டதால் கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது என்றுப் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை தெல்லிப்பழை

(8-ம் பக்கம் பார்க்க)

## கடத்தலை இராணுவத்தினர் முறியடித்தனர்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடொன்றிலிருந்து கடத்திவரப்பட்ட பொருட்கள் உட்பட இரண்டு வாகனங்கள் யாழ் சுங்க இலாகாவினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவாகும்.

நேற்று முன்தினம் இரவு, மாதகல் கடற்கரையில் வைத்து ரோந்து சுற்றிக் கொண்டிருந்த இராணுவத்தினரால் இக்கடத்தல் கண்டு பிடிக்கப்பட்டது.

கடத்தலில் ஈடுபட்டிருந்த நபர்கள், இராணுவத்தினரைக்கண்டதும் பொருட்களையும் வாகனங்களையும் விட்டுத், தப்பி ஓடிவிட்டனராம்

அவ்விடத்துக்குச் சென்ற இராணுவத்தினர் இருகார்கள், இலக்கமில்லாத ஹொண்டா மோட்டார் சைக்கிள், 4 'அவுட்போட்' இயந்திரம், 2 ஆயிரம் சரங்கள் எவர்சில்வர் பாத்திரங்கள் ஆயிரம் ருத்தல் கோப்பிக் கொட்டை ஆகியவற்றைக் கைப்பற்றி யாழ் சுங்கஇலாகாவிடம் ஒப்படைத்தனர்.

விசாரணை மேற்கொண்ட யாழ் சுங்க இலாகா சப். கலெக்டர் திரு எஸ். கணேஷ் வாகனங்களையும் பொருட்களையும் பறிமுதல் செய்யும்படி உத்தரவிட்டார். [மா]

# விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்கு சந்தியில் 3 1/2 பரப்பு காணி பண்டிய வீட்டுடன் விற்பனைக்குண்டு. (இரு பகுதிகளாகவும் விற்கப்படும்)தொடர்பு: 37/1, மாட்டீன் ரோட்,யாழ்ப்பாணம். (15 5)

3 ஸ்ரீ 9000 தொடரிலக்கமுள்ள ஒஸ்ரின் கேம்பிறிட்ஜ் (பரீனு) கார் உடன் விற்பனைக்கு உண்டு. மொறிஸ் மைனர் காருக்கு மாற்றவும் விருப்பம். தொடர்பு:வி கந்தசாமி, டச்ரோட், சித்தன் கேணி. (1525)

சுன்னுகம் சந்தியிலிருந்து ½ மைல் தூரத்திற்குள் தொழிற்சாலை அமைக்கக்கூடியதும் வீடுகட்டக் கூடியதுமான நல்ல காணி 10 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு: சு. தம்பித்துரை ஆசிரியர், தனலக்குமி வாசா, சுன்னுகம். 1489

யமகா, புதிய பியானே, சோனி கசற் டெக், வீட்டுப் பாவனைப் பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 42/4, கோவில் லேன், (சோமசுந்தரம் வீதிக்கு அருகாமையில்) சுண்டுக்குளி. 1494

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதியில் சிவன்கோவிலுக்கு சமீபத்தில் இருக்கும் நம்பர் 248 மேல் மாடியுடனும் பின்னுக்கு அறைகளையும் கொண்டவியாபாரம் நடந்து கொண்டிருக்கும்T.N.லிங்கம் மோட்டார்பாட்ஸ் கடை உடனடியாக விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 179, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24160 22408. 1539

நல்ல பாவனையில் உள்ள 88ஸ்ரீ தொடர் இலக்கம் கொண்ட ''ஹொண்டா''125 TWIN மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் இராசேந்திரம் (ஆசிரியர்) குளமங்கால், மல்லாகம். 1507

8 கிழமை நிரம்பிய பூச்சி அகற்றிய நல்ல இன கறுப்பு-மண்ணிற, கறுப்பு - வெள்ளிய அல்சேசன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. திரு.கே.திருநாவுக்கரசு,வி.கே.ரி கட்டடம் கொக்குவில் மேற்கு. 15/1

கொடிகாமம், கண்டிவீதியில் (பிரசவ ஆஸ்பத்திரி வீதி) 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கந்தையா, சிவநேச கபே, கொடிகாமம் 1513

கண்டி ரோட் அரியாலையில் பொன்னம்பலம் வீதிச்சந்திக்கு அருகில் தென்னை, பனைகளுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.கெலன் இல: 1, கதீற்றல் வீதி.யாழ்ப்பாணம். 1524

மாதகலில் இருந்து பெரிய விளானுக்குச்செல்லும் வீதியில் ஏழு பரப்புக் காணி உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு; கே. துரைராசா, முருகன்கோவிலடி பெரியவிளான். 1502

## WANTED

Wanted Tennant/Caretaker single or married with 4 A/L passes minimum for old house and property 4½ miles from Jaffna town. Apply with full particulars in confidence. S. Nagalingam, Kreston M.N.S., and Co., 42, K.K.S. Road. Jaffna. 1486

## தேவை

பாலர் பாடசாலையில் கடமையாற்ற ஆசிரியை தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். 107, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.1482

85 A/L பரீட்சை மாணவனுக்கு பிரத்தியேக பௌதிகவியல் ஆசிரியர் (Individual Tutor தேவை. R. துரைராஜா, 45, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1540

கடைச்சல் வேலை,பெயின்ரிங் பொலிசிங், தளபாடம் பின்னுதல் போன்றவற்றில் அனுபவமுள்ள பெண்கள் உடன்தேவை 06-09-1984க்கு முன் கடிதமூலம் அல்லதுநேரில்தொடர்பு கொள்ளவும். 'கிருஷ்ணுஸ்', பருத்தித்துறைவீதி,இருபாலை, கோப்பாய். 1521

Building Supervisors தேவை யாழ்நகரில் அல்லது அண்மையில் வசிப்பவர்கள் விரும்பப்படுவர்- Draughtsman தகைமை இருப்பின் நன்று. 4-9-84 இன் முன் முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1536, மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 1536

## சேவை

2000 பனம் விதைகளை எமக்குத் தந்து ஒரு பெரிய பந்தைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற் யாழ்ப்பாணம். 1443

## தவறிவிட்டது

எனது அடையாள அட்டை தவறிவிட்டது. அதில் உள்ள முகவரி 29/4, கடையிற்சுவாமி லேன், நீராவியடி, யாழ்ப்பாணம். தயவுசெய்து பின்வரும் முகவரியில் ஒப்படைப்பவர்கட்கு உரிய சன்மானம் வழங்கப்படும். நாகேந்திரம் சிவானந்தன், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1545

முக்கியமான Film Negetive ஒன்று பிரதான வீதியில் ரெம்பிள் ரோட் சந்திக்கும் சுண்டிக்குளிச் சந்திக்கும் இடையில் 29-8-84 மாலை 4 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் எஸ். என். ஆர். படப்பிடிப்பாளர், 4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். 1538

86 ஸ்ரீ 9708 மோட்டார் சைக்கிளின் இன்சூரன்ஸ் ரைக்ஸ் யாழ்ப்பாணத்தில் தொலைந்துவிட்டது. கண்டவர்கள் தயவுசெய்து எம். தவராசா, இந்திரா காட்வெயெஸ் ஸ்ரோஸ், 131, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1532

## FOR SALE

House and property, vacant possession. Excellent location in Chundikuli close to schools Advt. 1529, C/o Eelanadu, Jaffna. 1529

## யாழ்ப்பாண அக்கடமி

### க. பொ. த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985 மீட்டல் வகுப்புகள்

க. பொ. த உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம். பாடத்திட்டம் முற்றுக மீட்டல் செய்யப்படும்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப் படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 3 9 - 84-ல் ஆரம்பமாகின்றன.

84/85-ம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதிக்கு எமக்கூடாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 65 மாணவர்களுக்கு மேலாக மருத்துவம், பல்லறுவை மருத்துவம், விலங்கு மருத்துவ விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம், எந்திரவியல், பௌதிக விஞ்ஞானம், சட்டம் ஆகிய பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இது எமது திறமைக்குச் சான்றாகும்

அதிபர்.
தொலைபேசி எண். 22617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 1283

## இரூஸ் உலொறி தட்டுப்பலகை அடித்தல் கேள்விப் பத்திரம்

புதிய பலகை உட்பட தட்டுப் பலகை அடித்தல் கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**வேலை விபரம்:**

1. தற்போது தட்டுமேல் உள்ள தகரம், பட்டம் நல்ல நிலையில் உள்ளது. அதனை பழுதுபடாது கழட்டி நெளிவு எடுத்து திரும்ப புதிய தட்டுக்குமேல் அடித்தல் வேண்டும்.
2. தட்டுப்பலகை நாவல் அல்லதுசப்பு ஆகஇருக்க வேண்டும்.
3. குறைந்த கேள்விக்காரருக்கு 1/2 பங்கு முற்பணம் உடனே தரப்படும். பலகை கொள்வனவுசெய்து, சீவி முடித்த பின்னர் 3 (மூன்று) நாட்களில் தட்டுஅடித்து உலொறி விடவேண்டும்.

விண்ணப்பமுடிவு திகதி: 14-9-1984

**பொதுமுகாமையாளர்**
பூநகரி ப.நோ.கூ. சங்கம்,
பூநகரி.
(1541)

## பிறந்த நாள் வாழ்த்து

செல்வி அகல்யா



சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தெய்வேந்திரன் - செல்வக்குமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வி அகல்யா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (1-9-84) துன்னலை தெற்கு கோவிற் கடவையிலிருக்கும் இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா,அம்மா அம்மம்மா, அம்மப்பா அப்பம்மா, அப்பப்பா மற்றும் மாமாமார், பாபு மாமா, அன்ரிமார், மாமிமார், Franceல் இருக்கும் சித்தப்பா மற்றும் உறவினர் அனைவரும் பல கலைகளும் கற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிருர்கள்.1522

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

தவனேஸ்வரன் கஜனி



கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த தவனேஸ்வரன் லலிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி 'கஜனி' தனது பிறந்ததினத்தை 1-9-84 சனிக்கிழமை அவரது இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிருர். இவரை அப்பா,அம்மா அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா,அம்மம்மா, இத்தாலி மாமாமார், மாமிமார், இத்தாலி சித்தப்பா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்ருர், உறவினர்கள் பல்கலைகளும் பெற்று துர்க்கை அம்மன் அருளால் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிருர்கள் 1526

உபயோகித்து பழுதடைந்து கிறல் விழுந்து மங்கிய எவர்சில்வர் பாத்திரங்களை நிருத்தி புதியன போல் மெருகிட்டு வழங்கப்படும்.
உங்கள் தேவைக்கு
**பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்,**
257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(1519)

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,
**கொழும்பு ஸ்ருடியோ**

UNIQUE COMMUNICATION SERVICE
**யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்**



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்
**24 மணிநேர சேவை**
யாழ் நகர அலுவலகம்
28/18 - 1-1 மகாத்மா காந்தி ரோட்.
(சலுசலவுக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891
கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு 1
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066

சமய சமுதாய ஆய்விற்கான
**கிறிஸ்தவ நிறுவனம்**
ஆய்வுரை: ''வட்டுக்கோட்டை செமினரியின் முப்பெரும் அறிஞர்கள்''
தலைவர்: திரு. என். சபாரத்தினம்
(யாழ். இந்துக்கல்லூரி முன்னுள் அதிபர், ஆசிரியர், ஈழநாடு)
ஆய்வுரையாளர்; திரு. எஸ். ஜெபநேசன்
M A. M. (Phil) B. D.
இவ்வாய்வுரை யாழ். றிம்மர் மண்டபத்தில் 6-9-84 வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறும்.
அனைவரும் வரவேற்கப்படுகின்றனர்.
**எஸ். எஸ். அருளம்பலம்,**
இயக்குனர் C. I. S. R. S.
(1530)

# தென்னுபிரிக்காவுக்கு எதிரான போராட்டங்களை இந்தியா தலைமைதாங்கி நடத்த வேண்டும்!

## பிரதமர் இந்திராவுக்கு அந்தத்தகுதி இருக்கிறது என்கிருர் ஐ. நா. குழுத்தலைவர்

(புதுடில்லி)

தென்னுபிரிக்காவின் இன ஒடுக்கலுக்கு எதிராக உலக நாடுகள் தமது போராட்டத்தை தொடக்கவேண்டும் என்று ஐ.நா.வின் இன ஒடுக்கலுக்கு எதிரான குழுவின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்போராட்டத்தை இந்தியா முன்னின்று நடத்த வேண்டும் ' என்றும் அவர் கேட்டுள்ளார்.

இந்தியாவில்விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஐ. நாவின் இன ஒடுக்கலுக்கு எதிரான குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் தர்பர் நேற்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திஞர்.

இப்பேச்சுவார்த்தையின்பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் பேசுகையில், தென்னுபிரிக்காவுக்கு எதிரான போராட்டத்தைத் தலைமைதாங்கி நடத்துமாறு தான் இந்தியப் பிரதமரைக் கேட்டதாகக் கூறிஞர்

தென்னுபிரிக்காவுக்கு எதிரான போராட்டத்துக்கு தலைமை தாங்கக்கூடிய தகுதி திருமதிகாந்திக்கே இருக்கிறது என்றும் அவர் கூறிஞர்.

## மன்னுரில் எரிந்த கடைகள் விபரம் சேகரிப்பு

[மன்னுர்]

மன்னுரில் எரிந்தகடைகளின் விபரங்களை இலகுவில் சேகரிக்கும் பொருட்டு கடைகளின் உரிமையாளர்களுக்கு மன்னுர் அரசாங்க அதிபரிஞல் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இப் படிவங்களில் மொத்தம் 28 விஞக்கள் அடங்கியுள்ளது. படிவங்கள் கட்டிடங்கள் உட்பட சேதமான பொருட்களின் விபரங்கள் யாவும் கோரப்பட்டுள்ளது.

படிவங்களை பூரணப்படுத்தி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்ததும் சேதமதிப்பீடு உத்தியோக பூர்வமாக மதிப்பிடப்படும்.

இதேவேளை, மன்னுரில் மீண்டும் சனநடமாட்டம் அதிகரித்து வருகிறது.

## நிக்கராகுவா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாம்!

மஞகுவா ஆகஸ்ட் 31, நிக்கராகுவா மீது ஆயுதத் தாக்குதலை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று சாண்டினிஸ்டா தேசவிமோசன முன்னணியின் தேசியத் தலைமைக்குழு உறுப்பினரும் அரசாங்கத்தின் இணைப்பாளருமான டானியல் ஓர்ட்டேசா குற்றம் சாட்டியுள்ளார்.

''குடியரசுக் கட்சியின் கொள்கை விளக்க அறிக்கையில் வாஷிங்டனின் திட்டங்கள் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிக்கராகுவாவுக்கு எதிராகயுத்தத்தை நடாத்திவரும் வாஷிங்டன் நிர்வாகம் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கடுமையாக்கி வருகிறது. அமெரிக்க ராணுவத்தின் உதவியுடன் ஹொண்டூராஸில் இராணுவப்பயிற்சிகள் நடைபெறுகின்றன அந்தநாட்டில் அமெரிக்க ராணுவத்தளங்களும் பத்து விமானத்தளங்களும் கட்டப்பட்டுள்ளன எமது நாட்டிற்கெதிரான ராணுவத்தலையீட்டைச் செய்வதற்கே இந்த ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## போஷாக்கு வாரம் வவனியாவிலும் விரிவான ஏற்பாடுகள்!

(வவனியா)

அகில இலங்கை போஷாக்கு வாரத்தினை முன்னிட்டு வவனியா மாவட்டத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்த வவனியா திட்டமிடல் பிரிவினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்

அக்டோபர் 29-ம் திகதி முதல் நவம்பர் 2-ம் திகதிவரையிலான காலப்பகுதியே போஷாக்கு வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வவனியாவிலுள்ள 24 கிராமோதய சபை மட்டத்திலும் உதவி அரயாங்க அதிபர் பிரிவுமட்டத்திலும் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது. மாவட்டமட்டத்திலான கருத்தரங்கு அக்டோபர் 2ம் திகதி நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கல்வித் திணைக்களத்தின் அனுசாணையுடன் வவனியாவிலுள்ள பாடசாலைகளுக்கிடையே பேச்சு, கட்டுரை, சித்திரப்போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

உணவு போஷாக்குக் கொள்கைத்திட்டமிடல் பிரிவு அமைச்சின் அனுசரணையுடன் இந்த நிகழ்ச்சிகள் நடாத்தப்படவுள்ளது

## ரூ. 76,400 கொள்ளை

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சரவணமுத்து முருகமூர்த்தி என்பவரின் வீட்டில் 76,400 ரூபா பெறுமதியான ரொக்கப் பணம் மற்றும் தங்கச் சங்கிலி கைக்கடிகாரம் ஆகியவையும் திருடப்பட்டுள்ளது.

தொலைக்காட்சிநிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு நித்திரைக்கு சென்ற பின்னர் இக் கொள்ளைச் சம்பவம் நடந்ததாக காங்கேசன்துறை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## இந்தியன்எயர்லைன்ஸ் விமானசேவை: பயணிகள் மீதான சில கட்டுப்பாடுகள் தளர்வு!

(புதுடில்லி)

இந்தியன் எயர் லைன்ஸ் விமான சேவையின் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ளன.

உள்ளூர் விமானசேவையில் பயணம்செய்யும் பயணிகள் தம்முடன் கைப்பையை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வ தேச விமான சேவை விமானங்களில் மட்டுமே பயணிகள் கைப்பைகளை எடுத்துச் செல்லமுடியாது.

## பணிப்பாளர் சபை உறுப்பினராக தெரிவு

(கொழும்புத்துறை)

இலங்கை பனை அபிவிருத்தி சபையின் பணிப்பாளர்சபை உறுப்பினராக மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத்தலைவரும் மண்டைதீவு பனம்பொருள் உற்பத்தியாளர் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவருமான திரு. சி. பாலசிங்கம் பிரதேச அபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்கல், இந்து மதகலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரையிஞல் நியமனம் செய்யப்படடுள்ளார்.

பனை அபிவிருத்தி சபையின் பணிப்பாளராக இருந்த கலாநிதி எஸ். மோகனதாஸ் இச்சபையின் பொதுமுகாமையாளராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து காலியான இடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

யாழ். மாவட்ட இந்துஇளைஞர் பேரவைத்துணைச் செயலாளரும், தீவுப்பகுதி அபிவிருத்திச்சபையின் செயலாளருமான இவர் யாழ் மாவட்டத்தில் பல பொது ஸ்தாபனங்களிலும் அங்கம்வகித்து வருவதுடன் கிராமிய அபிவிருத்தி, மூலவள உற்பத்தி அபிவிருத்

(7ம் பக்கம் பார்க்க)

## உலக ஜனத் தொகையில் கால்பங்கினர் படிப்பறிவற்றவர்கள்

பாரிஸ் ஆகஸ்ட் 31, உலக ஜனத்தொகையில்27.7 சதவீதம் அல்லது 89 கோடிப் பேர் படிப்பற்றவர்கள். இவ்வாறு இங்குவெளியான யுனெஸ்கோஅறிக்கை கூறுகிறது.

பதினைந்து வயதுக்கு மேற்பட்டவர்களில் படிப்பறிவற்றவர்களின் தொகை ஆண்டு தோறும் 50 லட்சத்திஞல் உயர்ந்து செல்கிறது. இதில் சாதனை ஆபிரிக்காவுக்குத்தான் இங்கு 54 சதவீதமான மக்கள் படிப்பறிவற்றவர்கள் ஆசியாவில் 35 சதவீதமானவர்களும் லத்தினமரிக்காவில் 17 சதவீதமானவர்களும் படிப்பறிவற்றவர்கள் படிப்பறிவற்றவர்களில் ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகம், என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.

யுனெஸ்கோ டைரக்டர் ஜெனரல் ஏ. எம். எம். பௌவ்வின் கருத்துப்படி ''சமுதாய வளர்ச்சிப்பாதையில் கல்வியறிவின்மை பிரதான தடையாக உள்ளது. இது லட்சோபலட்சம் மக்கள் தமது சொந்த எதிர்காலம் குறித்துத் தீர்மானிப்பதைத் தடுக்கிறது. படிப்பறிவின்மையை அகற்ருமல் வறுமையையும் அசமத்துவத்தையும் அகற்ற முடியாது, என்றும் அவர் கூறிஞர்.

படிப்பறிவின்மையும் வறுமையும் ஒன்றுடன் ஒன்று பிணைந்தவை. வளர்முகநாடுகள் கடன்சுமையால் அவதிப்படுகின்றன. வெளிநாட்டுச் சுரண்டல்களிஞல் கல்விக்குத் தேவையான நிதிவளங்கள் அவற்றிடம் இல்லாதுள்ளன. அத்துடன் அவற்றின் சமூகப் பயன்பாட்டுக்குத் தேவையான பெரும்நிதியை ஆயுதப் போட்டி விழுங்கிவிடுகிறது. உலகம் ஆயுதங்களுக்காகச் செலவு செய்யும்பணத்தில் 8 முதல் 10 சதவீதமான பணம், வளர்முகநாடுகளின் வறுமை. நோய், படிப்பறிவின்மை ஆகியபிரச்னைகளைத் தீர்க்கப் போதுமானவை என்று யுனெஸ்கோநிபுணர்கள் தெரிவிக்கிருர்கள்.

## நல்லூர் உற்சவ ஏற்பாடு: ஆணையாளர் நன்றி

(யாழ்ப்பாணம்)

''நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த திருவிழாக்கள் சிறப்புற நடைபெறுவதற்கான யாழ்ப்பாண மாநகர சபை சம்பந்தப்பட்ட ஒழுங்குகளில் ஒத்துழைப்பு நல்கிய அடியார்களுக்கு, பொதுப்படையாகவும் புனித. யோவான் நோயாளர்சேவைப் படையினர், சாரணர்க , இந்து இளைஞர் இயக்கங்கள், கோவில் சூழலைச் சார்ந்த சனசமூக நிலையங்களது நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் இச்சபையின் சுகாதார, மராமத்து, மின்சாரப் பகுதிகளைச் சார்ந்தவர்களுக்கும் மற்றும் ஏனைய மாநகரசபை உத்தியோகத்தர்கள். ஊழியர்களுக்கு எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

இவ்வாறு யாழ் மாநகர ஆணையாளர் திரு சீ. வீ கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தரிசனத்துக்கு வரும்போது நகைகள் அணிவதைத் தவிர்த்துக்கொண்டதன் மூலம் ஆண்டவன் சந்நிதானத்தில் திருட்டுக்கள், கைமாறல்கள் இடம்பெற அனுமதியாது நடந்து கொண்டமைக்காக, குறிப்பாகத் தாய் குலத்தினருக்கும் அவர் நன்றி தெரிவித்ததுடன், வருடாந்தத் திருவிழாக் காலங்களில் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாது அடியார்க்கு அருள்பாலித்து அருளீந்த இறைவனின் ஆசி என்றென்றும் அனைவருக்குப் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகிருேம் எனறும்குறிப்பிட்டுள்ளார்.

## ''இலங்கைத் தமிழர் பிரச்னை: உணர்சியுடன் அணுகாதீர் தலைவர்களிடம் மூப்பஞர் கோரிக்கை

(புதுச்சேரி)

இலங்கைத் தமிழர் பிரச்னையை உணர்ச்சி பூர்வமாக அணுகக்கூடாது என்று இந்திரா காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. கருப்பையா மூப்பஞர் தெரிவித்துள்ளார்.

தக்கதொரு தீர்வைக்காண சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரச்னையைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் புதுச்சேரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

## மணிவாக்கு

இரண்டும் இரண்டும் நாலு என்பது வெறும் நம்பிக்கை அல்ல. ஆதாரமற்ற, எமது உணர்வே காரணமான எதனையும் நாம் நம்பிக்கையெனக்கொள்கிறோம்.

— பேட்ரன்ட் ரசல்

# நமது நோக்கு

## வன்னி மக்களின் கண்டனக் குரல்

சொல்வதொன்று செய்வதின்னொன்று என்பது அரசியலின் அரிவரிப்பாடம்.

அப்பாடம் உயர் வகுப்பிலும் மீட்கப்படுவது வரலாறு காட்டும் உண்மை.

இங்கிலாந்தை ஆண்ட ஒரே ஒரு சாதாரண பிரஜை ஒலிவர் கிறொம்வெல் (Cromwell) சண்டைக்கு தமது படைகளுக்குத் தலைமை தாங்கிய வீரன். "சமாதானப் பேச்சில் நம்பிக்கைகொள்ள பைபிளைப் படித்துப்பிரார்த்திப்போம்; அதே நேரத்தில் துவக்கு மருந்து குளிர்பிடியாது உடனடித் தேவைக்குத் தயாராக்குவோம்" என்பதே அவர் விடுத்த கட்டளை. இது இந்த முரண்பாட்டின் அவசியத்தை விளக்குகிறது.

தமிழர் சுயாட்சி, சுயநிர்ணயம் போன்ற தீர்வுகள் உண்மையாக உருவெடுக்கவேண்டுமானால் வன்னிப் பிரதேசத்தின் கற்பு பறிபோகக்கூடாது.

இதனை வன்னி மக்கள், தமிழ் மக்கள் மட்டுமல்ல அரசாங்கமும் நன்குணர வேண்டும்

திருவாசகம் படித்துக் கொண்டு கோயிலை இடிப்பவர்கள் இருப்பதாலேயே அந்த வாசகம் பழமொழி யானது.

அதுமட்டுமல்ல, இன்றைய ஆட்சியில் தமிழ் மக்கள் பெற்ற வாக்குறுதிகள் பல; தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள் பல; உயிரின் பாதுகாப்பு இன்றைய நிலைக்குத் தள்ளப்படுமென்று எந்த ஒரு மனிதனும் நம்பியிருக்க மாட்டான்.

இந்தப் பின்னணியில் அரசாங்கத்தாலும், ஜனாதிபதியாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடு காற்றில் பறக்கிறது ஒரு புதினமாகாது.

சில முக்கியமான நடவடிக்கைகள், கோட்பாட்டுக்கு முரண்பட்டால், ஜனாதிபதி அவர்களுக்குத் தெரியாமலே நிர்வாகத்தின் பெரிய பூசாரிகளால் நிறைவேற்றப்படலாம்.

மக்கள் விழிப்பின்றி வாளாவிருந்தால் அது முடிந்த காரியமாய்விடுவது இலங்கைத் தமிழர் வரலாற்றின் அரிய சாதனை.

வவனியாபற்றிய பிரச்னை கடந்த காலத்தில் தலையெடுத்தபோது வன்னி மக்களின் கண்டனக் குரலுக்கு மதிப்பளித்து அத்தகைய இணைப்புவேலை கைவிடப்பட்டது.

பழைய குருடி கதவைத் திறவடி என்கிறுள் போலும்.

நல்ல தருணம் இதுவென்று சதிவேலைக்காரர் நினைப்பது தவருகாது.

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்கிறோம்' என்ற கோஷம் பல அநீதிகளுக்கு வசதி அளிக்கும். அதுவும் தமிழ் மக்களுக்கு பலமளிக்கும் திட்டம் எது வென்றாலும் அதனைத் தவிடு பொடியாக்கி விட்டால் என்ன தண்டனை? ஒருவேளை பதவி உயர்வாயிருக்கலாம்.

வவனியா மாவட்டத்திற்கு வெளியிலும் நெடுங்கேணியிலும், புதிதாகச் சுமார் இரண்டாயிரம் குடும்பங்களைக் குடியேற்றுவது ஒரு திட்டம். மற்றது: வவனியா மதவாச்சி ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளையும் ஒன்றிணைப்பது.

இரண்டாவதான இந்தப் பழைய பல்லவி மக்கள் விழிப்பின்மையாலும் தலைவர்களின் இன்றைய அசமந்தப்போக்காலும் வாசிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் அபாயம் என்றும் உண்டு.

இவ்விணைப்பு நடவடிக்கை மதவாச்சி மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது சந்தேகம்; எனவே மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா, மக்கள் பேரிலும் தம்முடைய தலைமைக்கு ஏற்படக்கூடிய பங்கத்தின் காரணமாகவும் இதனை ஆட்சேபிப்பது நியாயமாகும்.

நெடுங்கேணிக் குடியேற்றம் இன்று காரசாரமாகப் பேசப்படும் தமிழ் மக்களின் பாரம்பரிய உறைவிடமென்ற அடிப்படை உரிமைக்கு முரண்பட்டதென்பதை யாரறியார்.

இதனை மந்த நிலையில் வைத்துக்கொண்டு நெடுங்கேணியில் மறைமுகமான திட்டம் உருவாகலாம்; எதற்கும் மக்களின் விழிப்புணர்வு வன்னி முன்னேற்றக்கழகம் போன்ற நிறுவனத்தின் பலத்தில் தங்கியுள்ளது.

எந்தப் புதுநடவடிக்கைகளும் அங்கு வாழும் மக்களுக்கு பாதிப்பேற்படுத்தக்கூடிய அச்சம் விளைவித்தால் அதனை மும்முரமாக எதிர்த்து தடுத்து நிறுத்துவதில் வெற்றிகாணவேண்டும்.

இவ்விதமான முக்கிய விடயத்தில் ஜனாதிபதியின் நேரடிக் கவனம் அவசியமானது. பாராளுமன்றப் பிரதிநிதிகள் இல்லாததால் அநீதி நீதியாகாது.

## கொழும்பு விவேகானந்த சபைப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

கொழும்பு விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் பரீட்சை செப்டம்பர் 10 ம் திகதி நடைபெறுமென சபையின் பரீட்சைசெயலாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சபையின் இவ்வாண்டுப் பரீட்சையின் விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்குமாறு பலபாடசாலைகளின் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்தே செப்டம்பர் 10 ம் திகதி வரை நீடிக்கப்பட்டதாகஅவர்தெரிவித்தார்.

(மா)

# தமிழர்களின் பெருஞ்சொத்து

# பேரறிஞர் தனிநாயகஅடிகள்

தமிழுலகம் என்றுமே மறக்க முடியாத பேரறிஞர் வண தனிநாயகம் அடிகளார்! தமிழின் பெருமையை உலகறியச் செய்வதையே தன் பணியாகக் கருதி சாகும் வரை உழைத்த தனித்துவமான அறிஞர்!

உலகத் தமிழ் அறிஞர்களை ஒன்றுபடுத்தி, உலகத் தமிழ் மகாநாடுகளை பல நாடுகளிலும் நடாத்தி, தமிழின் சிறப்புகளை பாரறியச் செய்வதில் அவர் வகித்த பங்கு அளப்பரியது.

சேவியர் நிக்கலஸ் ஸ்ரனிஸ்லஸ் என்ற தனிநாயகம் அடிகளார் 1913 ஆம் ஆண்டு ஆகஸ்ட் இரண்டாம திகதி ஊர்காவற்றுறையில் பிறந்தவர்.

யாழ்ப்பாணம் சென்பற்றிக்ஸ் கல்லூரியில், ஆரம்பக் கல்வியைப் பயின்றார். இவர் தனது தாயாரை பன்னிரண்டாவது வயதில் இழக்கவே, பாடசாலை இவரது வீடாகியது ஆங்கிலக் கல்விக்கேமுக்கியத்துவம்கொடுக்கப்பட்ட அந்நேரத்தில், இளைஞன் தனிநாயகம் தமிழிற்கும் தனது சொந்த முயற்சியில் முக்கியத்துவம் கொடுத்து, அவ் அறிவை வளர்த்தார்! பற்றிக்ஸ் அவருக்கே கல்விக்குப் பல பரிசுகளை வழங்கியது.

தனிநாயகம் குருத்துவப் படிப்பைத் தொடர ரோம் சென்றார். ரோமில் இருந்த ஐந்து வருட காலத்துக்குள், தனது அறிவைப் பல மடங்கு வளர்த்துக் கொள்வதிலும், நவீன ஐரோப்பிய மொழிகள், ஐரோப்பிய கலைகள் போன்றவற்றினைப் பயில்வதற்கும் இவருக்குப் போதிய சந்தர்ப்பம் கிடைத்தது.

ரோமிலிருந்து தென்னிந்தியாவுக்கு இளம் குருவாக வந்து அங்கு சிலகாலம் தங்கியிருந்து தமிழ் கலாசாரம், நாகரீகம் ஆகியவற்றை பேரறிஞர்களின் கீழிருந்து ஆராய்ந்தார்

தனிநாயகம் அடிகளார் தன் வாழ்வில் கத்தோலிக்க குருவாக, அறிஞராக, இன்னும் பல்வேறு துறைகளில் கீர்த்தி பெற்றவராக விளங்கியிருக்கிறார். தனிநாயகம் இரண்டாவது வத்திகான் சபைக்குப் பின்னர் கத்தோலிக்க தேவாலயங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணியில் இவருக்கும் பெரும் பங்குண்டு

### அண்ணாமலை பல்கலைக்கழகத்தில்

1945 ஆம் ஆண்டு தனிநாயகத்துக்கு மறக்கமுடியாத ஒரு பொற்காலம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியிலும், இலக்கியத்திலும் பட்டம்பெறுவதற்காக அப்போது அங்கு வேந்தராக இருந்த சேர் ராஜ முத்தையா செட்டியார் இவரை அணைத்துக்கொண்டார். பல்கலைக்கழக விடுதிகள்

## அவர் மறைந்து இன்று நான்காவது ஆண்டு

இல்லத்தில் குருவான தனிநாயகம் தங்கியிருந்து படிக்க வேந்தர் வசதி செய்து கொடுத்தார். தமிழ்மேதை தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின்தொடர்பு தனிநாயகம் அடிகளாருக்கு கிடைத்த பெரும் பாக்கியமாகக் கருதுகிறார். 1947ல் எம். ஏ. பட்டம் பெற்றார். இரண்டு ஆண்டு கழித்து இலக்கியத்திலும்இதே பட்டத்தைப் பெற்றார்.

தமிழ் இலக்கியம் சம்பந்தமான பல நூல்களை அடுத்தடுத்து வெளியிட்டார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறியதும் சென்னையில் நூல் வெளியீட்டு பணிகளில்ஈடுபட்டார்.

1950ம் ஆண்டு தனிநாயகம் அடிகளார் அமெரிக்கா, தென் அமெரிக்கா நாடுகள், ஜப்பான் ஆகிய இடங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அமெரிக்காவில் இவரது சுற்றுப் பயணத்தைக் குறிக்குமுகமாக 21 அமெரிக்க கத்தோலிக்க எழுத்தாளர்கள் மலரொன்றை வெளியிட்டுக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

1952ஆம் ஆண்டு தாய் நாட்டுக்கு திரும்பிய தனிநாயகம் இலங்கை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளரானார். பல முக்கியத்துவம் வாய்ந்த விரிவுரைகளை நிகழ்த்தினார் பல ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார்.

### டாக்டர் பட்டம்

லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகளைச் செய்யச் சென்றார் அங்குடாக்டர்பட்டம்பெற்றார். மலேசியா. சிங்கப்பூர், தமிழர்களின் மதிப்பையும் பெற்றவர் தனிநாயகம். அங்கு அவர் பல விழாக்களில் பங்கு கொண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். தமிழ் கலாசாரம் என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக இருந்தும் பணியாற்றினார்.

சர்வதேச தமிழராய்ச்சி நிறுவனத்தை 1964 ல் ஆரம்பித்து 1966ல் கோலாலம்பூரில் கருத்தரங்கை நடாத்தியது. இதன் பின்னர் இந்த நிறுவனத்தைப் பலப்படுத்துவதில் தனிநாயகம் அடிகளார் பெரும் பங்கு கொண்டு உழைத்தார்.

மலேயா பல்கலைக்கழகத்தில் இந்தியக் கல்விக்கான பேராசிரியராகச் சேர்க்கப்பட்டது, இவர் அங்கிருக்கும்போது, உலகத் தமிழ் அறிஞர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டார். 'தமிழ்க் கல்வி தொடர்பான சர்வதேச கூட்டத்தை' நடத்தினார். 15 நாடுகளைச் சேர்ந்த 60 அறிஞர்கள் கலந்துகொண்டனர். 1964 ஜனவரி 7-ல் இது நடந்தது.

புதுடில்லியிலிருந்து கோலாலம்பூருக்கு வந்த தனிநாயகம் முதலாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டினை 1966ல் இங்கு நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் முன்னின்று செய்தார். இதனைத் தொடர்ந்து மூன்று உலக மகாநாடுகள் சென்னை (1968), பாரிஸ் (1970) யாழ்ப்பாணம் (1974) ஆகிய இடங்களில் சிறப்பாக நடந்துமுடிவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தார்.

தனிநாயகம் அடிகளார் தமிழுக்குச் செய்த அளப்பரிய சேவைக்குச் சான்றாக மதுரையில் நடந்த ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் அவருக்குப் பெரும் கௌரவம் அளிக்கப்பட்டது. அவர் இறந்த பின்னர் நடந்த முதலாவது நினைவுதினத்தில், அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

தமிழர்கள் இந்த உலகத்தில் வாழும் வரைதனிநாயகம் அடிகளாரும் வாழ்வார்!

—ஈ.கே.ஆர்.

## சங்குவேலி ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார்

சங்குவேலி மக்கள் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்குபவர் சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் எனக் கூறின் மிகையாகாது.

இவ்வாலயம் 1918-இல் பிரபல வர்த்தகர் ஸ்ரீமான் மட்டக்களப்பு கா. வைத்திலிங்கம் அவர்களால் ஆகமமுறைப்படி அமைக்கப்பட்டது. சுற்றுப்பிரகாரங்களில் பாலசுப்பிரமண்யர் சகிதம் வள்ளி, தெய்வானை, நடேசர், சிவகாமியம்மன், வைரவர் சண்டேசுவரர், நந்தி ஆகியனவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மூன்றுகாலப் பூசையும் நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் கந்தசஷ்டி, சதுர்த்தி, திருவெம்பாவை, விநாயகர் விரதம், கார்த்திகைத் தீபம், 'நவராத்திரி, சிவராத்திரி ஆகிய விழாக்களும் சிறப்பாக நடைபெறும். இவ்வாலயத்தில் இளைஞர்களும் சிறுவர்களும், யுவதிகளும் இணைந்து இந்து ஆத்மீக கலை கலாசார சபைமூலம் ஆலயத்தில் சரியைத் தொண்டுகளில் பங்கு பற்றி வருகிறார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பஜனையைத் தொடர்ந்து பூசைக்குப்பின் இச்சபைகூடி சமயம் கலாசாரம் சம்பந்தமான பேச்சுக்களையும் பக்திப் பாடல்களையும் பாடி இறைவனை பணிந்து மெய்யன்புடன் வணங்கி வருகிறார்கள்.

ஆரம்பத்தில் அலங்காரத் திருவிழா நடைபெற்றது. பின் ஆவணிப் பூரணை தினத்தை தீர்த்தோற்சவமாகக்கொண்டு அதற்கு முந்திய ஒன்பது நாட்களும் மகோற்சவவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. முதலாந்திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எட்டாந்திகதி சனிக்கிழமை சப்பறமும், ஒன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் பத்தாந்திகதி திங்கட்கிழமை

க. கௌரி

தீர்த்தோற்சவமும் நடைபெறும். உற்சவதினங்களில் இந்து கலாசாரத்தைப் பேணும் இக்கிராமமக்கள் இந்திரவிழாவாகக் கொண்டாடுவார்கள்.

இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம், சங்காபிஷேகம், மண்டலாபிஷேகம் ஆகியனவும் நடைபெற்றன. பரீட்சைக்கு செல்லும்போதும், புதியதொரு தொழிலை ஆரம்பிக்கும்போதும், வித்தியாரம்பம் செய்யும்போதும், விவசாயத்தில் பங்குபெறும்போதும் "எந்தை ஐங்கரனைப் பூசித்து சென்றால் வெற்றியுடன் திரும்புவார்கள்.

## மகா கும்பாபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை சங்கரத்தை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் மகா கும்பாபிஷேகம் செப்டம்பர் 6ம் தேதி காலை நடைபெறும்.

சரித்திரப்பிரசித்தி பெற்ற இவ் ஆலயம் பெரும் செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ. சு. சுப்

( 5ம் பக்கம் பார்க்க)

# ஆந்திரா சிக்கல் -- தீருமா, வளருமா?

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் என். டி. ராமராவ் மந்திரி சபையைக் கலைத்து என். பாஸ்கரராவை முதல் மந்திரியாக நியமித்ததையடுத்து எழுந்த அரசியல் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக ஆளுநர் ராம்லால் தம்பதவியிலிருந்து விலகிக் கொண்டது தவிர்க்கமுடியாத சூழ் நிலையாகும்.

தாமே உருவாக்கிய அரசியல் கிடங்கில் ஆளுநர் கண்ணை மூடிக்கொண்டு வீழ்ந்துவிட்டார் என்று சொல்லிவிடமுடியாது.

ஆந்திர பிரதேச காங்கிரஸ் (ஐ) தலைவர்களும், மத்திய தலைவர்களும், விரும்பி ஏற்கக் கூடிய சூழ்நிலையொன்றை (அவர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ) உருவாக்க திரு. ராம்லால் முனைந்தார். அது வேறு விதமாக மாறி நாடு முழுவதிலுமே அமைதியின்மையையும் போராட்டங்களையும் தோற்றுவிப்பதாய் நிலைகுலையத்தொடங்கியது. பொதுத்தேர்தலை எதிர்பார்த்து நிற்கும் வேளையில் இப்படியான ஒரு சூழ்நிலை உருவாகுவதை மத்தியத் தலைவர்கள் விரும்பவில்லை. எனவே தான் அவர்களின் உத்தியோக பூர்வமற்ற ஆலோசனைகளை ஏற்று பதவியிலிருந்து விலகிக் கொண்டுவிட்டார் ராம்லால்.

தனிப்பட்ட முறையில் ஒரு ராம்லால் இந்த விவகாரத்தில் அபகீர்த்தியைத் தேடிக் கொண்டுவிட்டாலும், கட்சிக்கும், கட்சித்தலைவர்களுக்கும் முகத்தில் பெரிதாகக்கரி பூசப்படாமல் தப்புவதற்கு இது உதவியுள்ளது எனலாம்.

என்றாலும் ஆந்திராவில் நிகழ்ந்துள்ள குளறுபடிகளுக்கும், தில்லுமுல்லுகளுக்கும் ஆளுநரின் பதவிவிலகல் ஒரு பிராயச்சித்தமாகக் கொண்டுவிடமுடியாது.

ஆளுநர் விட்ட தவறுகளை இது முழுதுமாகத் நிவிர்த்தி செய்துவிடும் என்று எவரும் எதிர்பார்க்கமுடியாது

இப்பொழுது திரு. சங்கர் தயாள் சர்மா புதிய ஆளுநராகப் பதவி ஏற்றுள்ளார். நிலைமைகளை ஓரிரு தினங்களில் அவர் விரிவாக ஆராய்ந்து தெளிவுபடுத்திக் கொள்ளமுடியும். அடுத்து, மாநிலத்தில் ஆட்சியில் இருப்பதற்குத்தமக்குத் தகுதியுண்டு என்பதை நிரூபிக்க முன்னாள் முதல்வர் திரு. என். டி, ராமராவுக்கு கூடியவிரைவில் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுப்பதே இவரது முக்கியபொறுப்பாக இருக்கவேண்டும்.

முன்னைய ஆளுநர் தாம் செய்த தவறை உணர்ந்து பதவியிலிருந்து விலகிக்கொண்டார் என்றால் அத்தவற்றைத் திருத்தியமைப்பதே புதிய ஆளுநரின் கடமையாக இருக்க வேண்டும். அதைவிடுத்து முறைதவறிப் பதவிக்கு வந்த புதிய முதல்வர் என். பாஸ்கரராவ் சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவைப் பெருக்கிக் கொண்டு ஆயத்தமாகும்வகையில் மேலும் அவகாசம் வழங்குவதையே தமது முக்கிய நோக்கமாகச் செயல்படுவாரானால் ஜனநாயகத்தின் குரல் வளையைத் திருகும் வேலையில் இவரும் இறங்குகிறார் என்பது ஒருபுறமிருக்க அரசில் ஊழல்கள் வளரவும் இடம்தருகிறார் என்று அர்த்தமாகிவிடும்.

ஏற்கனவே திரு ராமராவின் ஆதரவாளர்களான எம். எல். ஏக்களைத் தட்டிப்பறிப்பதற்காக பாஸ்கரராவின் ஆட்கள் தலைக்கு 25ஆயிரம் ரூபாய் வரை பேரம் பேசுவதாகக் கூறப்படுகின்றது. இதனால் நிலைமை சீராகி சட்டசபை கூடும்வரைக்கும் திரு. ராமராவின் ஆதரவாளர்களான எம். எல். .ஏக்கள் கர்நாடகத்தில் போய் தங்கியிருக்கிறார்கள். என்பது குறிப்பிடத்தக்கது.

### இதயத்துல்லாவுக்கு பிரியாவிடை

இந்தியத் துணைக் குடியரசுத் தலைவராகவும் ராஜ்ய சபைத் தலைவராகவும் திரு. ஆர் வெங்கட்ராமன் நேற்று பதவி ஏற்றுக்கொண்டார்.

---

### பி. எஸ். பி.

---

ராஜ்யசபையின் முன்னாள் தலைவர் திரு எம். இதயத்துல்லாவுக்கு கடந்த 24-ம் திகதி ராஜ்யசபை உறுப்பினர்கள் அன்புடன் பிரியாவிடை அளித்துக் கௌரவித்தார்கள்.

இந்த வைபவத்தில் பேசிய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர் ஒரு கௌரவமான தலைவராக மட்டுமிருக்கவில்லை. வழிகாட்டுபவராகவும் தத்துவவாதியாகவும் நண்பராகவும் விளங்குகின்றார். அறிவையும் நகைச்சுவையையும் ஒன்றாகக் குழைத்து புரிந்துணர்வுடன் வழங்கும் திறன்படைத்தவர்'' என்று பாராட்டினார்.

திரு இதயத்துல்லா பதிலளிக்கையில், உறுப்பினர்கள் சிலர் சேக்ஷ்பியரின் வாசகங்களைப் பிழையாகக் கூறியதை நகைச்சுவையுடன் திருத்தினார்

திரு வெங்கட்ராமனின் தெரிவுபற்றி குறிப்பிடுகையில்; ''புதிய தலைவரைத் தெரிவ செய்வதில் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். அவரது அறிவுக்கும் தகுதிக்கும் ஏற்ப அவர் ஒரு இலட்சியத் தலைவராக என்னைவிட சிறந்த தலைவராக இருப்பார். நான் சில சமயம் தளர்ந்துபோவதுண்டு. அவர் சபையை ஒழுங்குடன் வைத்திருப்பார், பத்திரிகையில் பல பெயர்கள் அடிபட்டன. பிரதமர் என்ன செய்யப்போகிறாரோ என்று நான் யோசித்தேன் ஆனால் சரியான ஒருவரையே அவர் தெரிந்துள்ளார்'' என்றார்.

★

### லியனகே கிளப்பிய பூகம்பம்

இலங்கை ராஜாங்க அமைச்சின் செயலாளரும் பிரதம செய்தித் தணிக்கை அதிகாரியுமான திரு. டொக்ளஸ் லியனகே தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இஸ்ரேலுக்குச் சென்று அங்குள்ள பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டி அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்திருப்பது ஒரு புறமிருக்க, இவ்வளவு பொறுப்புமிக்க ஒரு அதிகாரி அரசுத் தலைவர்களுக்குத் தெரியாமல் இஸ்ரேலுக்குப் போயிருப்பாரா?- அங்கு இலங்கை இராணுவம், மற்றும் 'மொசாட்' இயக்கப் பிரதிநிதிகள் பற்றியெல்லாம் கூறியவை உண்மைக்குப் புறம்பானவை தானா? என்றெல்லாம் இப்போது அரசியல் வட்டாரங்களில் பலமாக விவாதிக்கப்படுகின்றது.

''பாவி மனுசன் இஸ்ரேலுக்குப் போனதேதான் போனார். பத்திரிகைக்கு ஏன் பேட்டி கொடுத்தார்'' என்றவாறு அரசு வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகின்றதாம்.

லியனகேயின் இஸ்ரேலிய விஜயம்பற்றி கொழும்பு பத்திரிகைகள் சில காரசாரமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றன. சில அமைச்சர்களும் கண்டிப்பான குரலில் பகிரங்கமாகப் பேசியுள்ளார்கள்.

ஒரு பத்திரிகையில் வெளிவந்த கார்டூன் படத்தில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன,

''டொக்ளஸ் காரியத்தைக் கெடுத்துவிட்டானே! சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டவனாக இருந்தும் இரகசியத்தைக் காபபாற்ற முடியவில்லையே!'' என்று கவலைப்படுவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இன்னொரு படத்தில் லியனகே ஒரு மரத்தில் கட்டி வைக்கப்பட்டுள்ளார். ஏராளமான மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு ஜயவர்த்தன ஒரு கசையைக் கையில் வைத்துக் கொண்டு லியனகேயின் அருகில் சென்று காதில் கூறுகிறார்

''நான் பொய்க்கு அடிக்கிறேன், நீ பெரிதாக அழு'' என்று இன்னொரு பத்திரிகையில் ''டொக்ளஸ் நீர் ஒரு புனைப்பெயரில் பேட்டி கொடுத்திருந்தால். இந்த வினையே வந்திருக்காது'' என்று குறிப்பிட்டுள்ளது.

திரு. லியனகே நாடு திரும்பினால் இன்னும் சுவையான விடயங்கள் வெளிவரலாம் அல்லவா?

---

# கொள்ளைப்பொருட்கள் மீட்பு சந்தேக நபர்களும் கைது

[மன்னார்]

மன்னாரில் அண்மையில் கடைகள்எரிக்கப்பட்ட போது பூட்டியிருந்த பல கடைகளை உடைத்து பொருட்களை கொள்ளையடித்த பலர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி கே.அரசரட்ணம் தலைமையில் மன்னாரில் கடமையாற்றும் பொலிசார் கடைகள் எரிக்கப்படும் சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன் படுத்தி பொருட்களை கொள்ளையடித்த கொள்ளையர்களை கைது செய்தனர்.

இத்துடன் கொள்ளையடிக்கப்பட்ட பெருந்தொகையான பொருட்களையும் பொலிசார் கைப் பற்றினர்.

---

# பயிற்சி நெறிகளுக்கு ஆசிரியர்கள் அனுமதி

[கொழும்புத்துறை]

ஆசிரியர்கள் கல்வியாளர் பயிற்சிநெறிகளுக்கு ஆசிரியர்களை அனுமதிக்கக் கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது

இப்பயிற்சி நெறிகளில் சேவையிலுள்ள பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்கள், ஆலோசகர்கள் விரிவுரையாளர்கள் வட்டாரக் கல்வியதிகாரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21ம் திகதிக்கு முன்னர் நியமனம் பெற்றஆசிரியர்களே இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியும் ஆனாலும் இத்திகதிக்கு பின்னர் நியமிக்கப்பட்ட ஆங்கில உதவி ஆசிரியர்களும் ஆசிரியர்கள் கல்லூரியில் ஆங்கிலம் கற்கை நெறிகளில் சேருவதற்கான பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சி நெறி மூன்று வருட காலத்தைக் கொண்டிருக்கும்.

---

# விவசாயத்துறையில் துரித கதியில் முன்னேறும் கிளிநொச்சி

## திறப்புவிழா வைபவத்தில் அரச அதிபர்

(கிளிநொச்சி)

''விவசாயப் பிரதேசமான கிளிநொச்சி மாவட்டமக்கள் பயனடையும் வகையில் கமநலசேவை உதவி ஆணையாளர் அலுவலகம் ஒன்றைதிறந்து வைப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அலுவலகம் திறக்கப்பட்டதன் மூலம் விவசாயத்துறையில் மேலும் இம்மாவட்டம் வளர்ச்சி அடையும்''

இவ்வாறு கிளிநொச்சியில் கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலகம் ஒன்றைத்திறந்து வைத்து உரையாற்றுகையில் அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கமநலசேவை மண்டபத்தில் இந்த அலுவலகம் திறத்துவைக்கப்பட்டது. திறப்பு விழாவைபவத்திற்கு கமநலசேவை உதவி ஆணையாளர் ந. பரமலிங்கம் தலைமை வகித்தார்.

பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எம். சபாரெத்தினம், கிளிநொச்சி கமநலசேவை நிலையத்தலைவர் க. பாக்கியநேசர் பெரும்பாக உத்தியோகத்தர் கே. சுந்தரேசன் விவசாய உதவிப்பணிப்பாளர் எஸ். டி, பத்மாநாதன் ஆகியோர் சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.

அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் மேலும் பேசுகையில கூறியதாவது:

''கிளிநொச்சி மாவட்டத்தின் எதிர்காலம்மிகவும் சுபீட்சமாக உள்ளது. 90 வீதமான விவசாயமக்களைக் கொண்ட இம்மாவட்டம் விவசாயத் துறையில் துரிதவளர்ச்சி பெற இன்று திறக்கப்பட்ட கமநல சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகம் பெரிதும் பாடுபடும் விவசாயச்சீரமைப்பிற்கும், நீர்ப்பாசன அபிவிருத்திக்கும் பல ஆக்கப்பணிகள் மேற் கொள்ளப்படவுள்ளன. விவசாய அபிவிருத்திக்கு நிலம் நீர்மட்டும் இருந்தால் போதாது கிருமிநாசினி வகைகள் பசளைவகைகள், விவசாய ஆலோசனைகள் போன்றனவும் இன்றியமையாதது. இவற்றைப்பெற்றுத்தர கமநல சேவை உதவி ஆணையாளர் திணைக்களம் பெரிதும் பாடுபடும். கிளிநொச்சி மாவட்டம் சகல துறைகளிலும் மிகவும் சுபீட்சபாதையை நோக்கி செல்ல சகலரும் ஒன்றுபட்டுப் பாடுபடவேண்டும்'' என்றார்.


**மின்சார பிரச்னையா!**

★ 3 பேஸ் 1 பேஸ் வயரிங்
(போயின்ருக்கு ரூபா 35/-)

★ ரான்ஸ்போமர்
(டெக், பூஸ்ரர், வெல்டிங், றேடியோ)

★ லிகுடைசர்ஸ் மோட்டார் வாஷிங் மெஷின்

★ மின் விசிறி குக்கர், ஸ்பீக்கர் ஆகியவை
திருத்த/றீவைண்டிங் செய்ய

**ஒமேகா** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில்)
வீடுகளுக்கு வந்து வேலைகள் செய்யப்படும்.


# கடற்றொழில் துறையில் தேசிய சான்றிதழ் பயிற்சி

(கொழும்புத்துறை)

கடலக மீன்பிடியிலான தேசிய சான்றிதழ் பயிற்சி நெறி அடுத்தவருடம் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, தங்காலை ஆகிய இடங்களிலுள்ள கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் இக் கடலக மீன்பிடியிலான பயிற்சிகள் நடத்தப்படும்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்புக் கடற்றொழில் பயிற்சி நெறி நிலையங்களில்இப்பயிற்சி நெறி தமிழ்மொழியில் நடைபெறும். நீர்கொழும்பு, தங்காலை கடற்றொழில் பயிற்சி நிலையங்களில் சிங்கள மொழியில் இப்பயிற்சிநெறி இடம் பெறும். இப்பயிற்சிக்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 24ம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி கடற்றொழில் பயிற்சி நிலையங்களின் அதிபர்களுக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆறு மாத காலம் இடம் பெறும் இப் பயிற்சி நெறிகளில் கடலோடல் இயந்திரங்களைக் கையாளுதல், மீன்பிடி நவீன கருவி முறைகள் ஆகியவை பற்றியும், இயந்திரமயமாக்கப் பட்ட சிறிய மீன் பிடிக் கலங்களை பேணுதல் இயக்குதல் ஆகியவற்றைபற்றியும் பயிற்சி அளிக்கப்படுவதுடன் பயிற்சியாளர்களுக் கேற்ப வலுவுள்ள மீன்பிடி வள்ளங்களை இயக்குவதற்கான அதிகாரமும் வழங்கப்படும்.

ஒவ்வொரு கடற்றொழில் பயிற்சி நிலையத்திற்கும் 36 பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

---

### கும்பாபிஷேகம்....

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பிரமணிபட்டர் ஆகியோர் பிரதம குருமார்களாக இருந்து கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைப்பார்கள்.

சட்டத்தரணி திரு.எஸ்.ஆர் கனகநாயகம், அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆகியோர் ஆசியுரைகள் நிகழ்த்துவர். மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. க.வி.விக்கினேஸ்வரன்சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கும்பாபிஷேக சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்படும். அராலியூர் திரு.வி. தம்பிராஜா குழுவினர் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டனர். [க]

# மன்ஞர் செய்திகள்

எஸ். தர்மகுலசிங்கம்

## வேலேகள் ஸ்தம்பிதம்

அபுதாபி அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மன்ஞரில் அமைக்கப்பட்டு வந்த மீன்பிடி துறைமுக வேலேகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

மன்ஞர் மீன்பிடி துறைமுக பிரதேசத்தில் தற்போது ஒரு வாடி வீடும், மீன்பிடி திணைக்கள அலுவலகமும் மட்டுமே இயங்கி வருகின்றன.

## கடும் நடவடிக்கை

மன்ஞர் பகுதியில் கடைகள் எரிக்கப்பட்டமையை சாதகமாகப் பயன்படுத்தி தலேமன்ஞர் பகுதியில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனையில் கொள்ளே லாபம் பெற முயற்சிக்கும்வர்த்தகர்கள் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தலேமன்ஞர் பொலஸ் நிலேயப் பொறுப்பதிகாரி கே. அரசரத்தினம் தலேமன்ஞர்பகுதி வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மன்ஞரில் கடைகள் எரிக்கப்பட்டதால் பொது மக்களின் தேவைகளேப் பூர்த்தி செய்வதற்கு பெருந் தொகையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள்கொழும்பிலிருந்து வந்துள்ளன ஆதலால், வர்த்தகர்கள் உணவுப் பொருட்களே பதுக்கி வைக்காது நியாய விலேயில் பொருட்களே விற்பனே செய்ய வேண்டும் என்றும்கேட்டுள்ளார்.

## பார்வையாளர்கள் மீது சோதனே

மன்ஞர் அரசினர் ஆதார வைத்தியசாலே வைத்திய அதிகாரிக்கு மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவையடுத்து வைத்தியசாலேயில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இதனுல் வைத்தியசாலேக்கு வந்து, போகும் பார்வையாளர்கள் சோதனேக்குட்படுத்தப்பட்ட பின்னரே வைத்தியசாலேக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்

## ஆலய உற்சவங்கள் ரத்து

தலேமன்ஞர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருவிழாவும் பேசாலே ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலய வருடாந்த திருவிழாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலேயை கருத்தில் கொண்டு இவ் விரு ஆலயங்களினதும் திருவிழாக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

தலேமன்ஞர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயதிருவிழா கடந்த 27ம் திகதியும், பேசாலே ஸ்ரீ சுப்பிரமணிய ஆலய திருவிழா கடந்த 26ம் திகதியும் ஆரம்பமாக விருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## மின்சார கட்டணம் உயர்வு

பேசாலேப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணம் விரைவில் உயர்த்தப்படவுள்ளது.

பேசாலே உப அலுவலகர், பேசாலே மீன்பிடி கூட்டுத்தாபனத்திலிருந்து பேசாலேப் பகுதி வீடுகளுக்கு விநியோகித்து வருகிறது.

பேசாலேயில் உப அலுவலகத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை அதிகரிக்கப்போவதாகபேசாலே மீன்பிடி கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதனேயடுத்தே பேசாலே உப அலுவலகம் பேசாலேப் பகுதி வீடுகளுக்கு விநியோகிக்கும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளது.

தற்போது பேசாலேப் பகுதியிலுள்ள வீடுகளுக்கு விநியோகிக்கப்படும்மின்சாரத்திற்கான கட்டணமாக ஒரு யுனிற்றிற்கு 4 ரூபா 50 சதவீதம் அறவிடப்படுகிறது.

இது விரைவில் 5 ரூபா 50 சதமாக உயர்த்தப்படலாம்.

## இவர்களுக்கு அடையாள அட்டை

மன்ஞர் மாவட்ட அபிவிருத்தி சபையின் உப அலுவலகங்களேச் சேர்ந்த ஊழியர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளே மன்ஞர் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணேயாளர் திரு. கே. பரமேஸ்வரன் மேற்கொண்டு வருகிஞர்.

## ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

மன்ஞரில் கடைகள் எரிக்கப்பட்டதால் வியாபாரத்தையே தொழிலாகக்கொண்ட ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 800 க்கும் மேற்பட்ட கடைச் சிப்பந்திகள்வேலேயிழந்துள்ளனர். என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## இடிந்து விழும் நிலேயில் கட்டடம்

மன்ஞர்- ஆத்திமோட்டை கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலேக் கட்டடம் இடிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மிகப் பழமை வாய்ந்த இக் கட்டடத்தில் பல வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாலேயே கட்டடம் இடிந்து விழும் நிலேயில் உள்ளது.

## வானொலி இன்று

காலே

- 5-30 நாதாஞ்சலி
- 5-35 தோத்திரமாலே கனகதாராதோத்திரம்
- 6-00 சைவநற்சிந்தனே
- 6-05 கத்தோலிக்க நற்சிந்தனே
- 6-10 அறநெறி ஆரம்
- 6-25 நிகழ்ச்சி முன்னேட்டம்
- 6-30 செய்திகள்
- 6-40 அறிவிப்புகள்
- 6-50 மெல்லிசைப்பாடல்
- 6-55 போதிமாதவனின் போதனேகள்
- 7-00 ஆங்கிலபாடம்
- 7-30 மாகாணச் செய்திகள்
- 7-35 இசையமுதம்
- 8-15 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 8-45 தாளவாத்தியக்கச்சேரி கானகோகுலம் சிவசொரூபநாதபிள்ளே
- 9-15 தமிழ் மூலம் சிங்களம் என். டி. பீரிஸ்
- 9-30 நாட்டுப்பாடல் எஸ் கணபதிப்பிள்ளே
- 9-45 தகவல்- எஸ். பி. என் புஸ்பரட்ணம்
- 10-00 சங்கமம்
- 10-30 கதைப்பாட்டு ''இளமையிற் கல்'' பாலாம்பிகை நடராஜா
- 10-45 அகில இந்திய வானெலி நிலேய ஒலிப்பதிவு
- 11-30 மாணிக்கமாலே
- 11-58 பகல் ஒலிபரப்புமுடிவு

மாலே

- 6-00 செய்திகள்
- 6-10 அறிவிப்புகள்
- 6-15 ஞானக்கோவை
- 6-30 இசைப்பயிற்சி
- 6-45 லயவின்யாசம் என் பாலச்சந்திரன்

இரவு

- 7-00 நாடகமேடைப்பாடல்கள் யாழ்ப்பாணத்தில் ஒலிப்பதிவு செய்யப்பட்டவை
- 7-30 உலகச் செய்திகள்
- 7-40 மெல்லிசைத்தேர்வு கே. ரி. செல்வலிங்கம்
- 7-45 செய்திச்சுருள்
- 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
- 9-00 செய்திகள்
- 9-10 செய்தியின் பின்னணியில்
- 9-15 அறிவிப்புகள்- பக்திப் பாடல்
- 9-30 நாடகம் ''தன்வினே'' எம். வி. தவராசா
- 10-00 நாதஸ்வர பிருந்த கானம் -ஆர். வி. செல்வராஜா' நிலேய வாத்தியக் கோஷ்டி
- 10-30 ஹிந்திபஜன்
- 11-00 ஒலிபரப்பு முடிவு

## இன்றைய பலன்

மாதம்—ஆவணி
திகதி—16(01-09-1984)
வாரம்—சனி
திதி—ஷஷ்டி பிற்பகல் 12-15 வரை
நக்ஷத்திரம்—விசாகம் முன் இரவு 1 -09வரை

மேடம்:- ஆசை அலேகளிஞல் அவதிப்படுவீர்கள் வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலேதென்படும் ஆணவப் போக்கிஞல் பிறருடைய பகையைச் சம்பாதித்துக் கொள்ளநேரிடும் நாவடக்கம் நன்று.

இடபம்:- குடும்பநலனில் புதிய உற்சாகம் பிறக்கும் உறவுமுறைகளில் அபிவிருத்தி காணப்படும் அமைதியுடன் காரியங்களேச் சாதிப்பீர்கள்.

மிதுனம்:- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள் இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும் மறைமுக எதிர்ப்புகளேச் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம்.

கடகம்:- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும் வியாபாரத்தின் மூலம் முன்னேற்றமுண்டு அதிக பொருள் வரவிற்கும் விளேபொருள் விருத்திக்கும் இடமுண்டு.

சிங்கம்:- அறவழிகளில்மன நாட்டம் செல்லும் தாராள மனப்பான்மை மூலம் பணமும் செலவாகும் இளேயபிள்ளேயால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு மனே வாழ்க்கையிலும் சுவையான சம்பவங்கள் இடம்பெறும்.

கன்னி:- சிறியவிடயம்கூட இன்று சிரமமாகத் தோன்றும் உள்வீட்டிலேயே பூசல்கள் தலேதூக்கும் வாய்வுப் பதார்த்தங்களேத் தவிர்த்துக் கொள்ளவும் திருப்தியற்றதினம்.

துலாம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும் நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு காதலர்கள் வாழ்க்கையில் பிணேப்புகள் இறுகும்.

விருச்சிகம்:- ஏமாற்றம் தாக்கும் எதிலும் தயக்கநிலே தென்படும் செய்தொழில் மூலம் நஷ்டம் ஏற்படலாம் செலவினங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

தனுசு:- புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும் பொதுத்துறையில் புகழ்பரவும் பெரியோர்களுடைய உதவிக்கும் இடமுண்டு கொண்ட கொள்கையில் உறுதிப்பாடு தென்படும்.

மகரம்:- புதியமுயற்சிகளில் ஆர்வம் தோன்றக்கூடும் வியாபாரிகளுக்கு இலாபகரமான தினம் புதிய தொடர்புகள் மூலம் முன்னேற்றம் ஏற்படும்.

கும்பம்:- பொருளீட்டுவதில் புதிய வழிகளேக்கையாளுவீர்கள் எதையும் சிறப்பாகச் சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர்கள் மக்களாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மீனம்:- சிந்தனே புதிர் போடும் சிறிவரும் கோபம் பெரியவர்களேப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் தொழில் துறையில் புதிய கவலேகள் தோன்றக்கூடும் தெய்வநம்பிக்கை சிறந்தபயன்தரும்.

திருமலே ரவீந்திரன்

## தற்கொலே

(கிளிநொச்சி)

பணக்கஷ்டத்தாலும் நோயிஞலும் அவதிப்பட்டு துன்பங்களே அனுபவித்துவந்த நீர்ப்பாசனத்திணேக்கள ஓவசியர் ஒருவர் நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணத்தை அனேத்துக்கொண்டார்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணேக்களத்தில் கடமையாற்றி வந்த பெரியதம்பி நடராசா (54 வயது) என்பவரே மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரனேயை கிளிநொச்சிப்பகுதி மரணவிசாரணேஅதிகாரி மு.யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளே கிளிநொச்சி ஆஸ்பத்திரிப்பொலிஸ் பிரிவைச் சேர்ந்த என் இராசசேகரம் ஆஜர்செய்தார்.

விசாரணே முடிவில் தற்கொலே என்று மரண விசாரணே அதிகாரி தீர்ப்பு வழங்கிஞர்.

## வெரிட்டாஸ் வானெலி நேரமாற்றம்

[யாழ்ப்பாணம்]

வெரிட்டாஸ் வானெலியில் தமிழ்பணி ஒலிபரப்பில் நேர அலேவரிசைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தினமும் காலே ஒலிபரப்பு காலே 6 மணி முதல் 6-25 வரை சிற்றலே 19 மீற்றரிலும் இரவு நிகழ்ச்சிகள் இரவு 7-30 மணி முதல் 8-00 மணிவரை சிற்றலே வரிசை 15,31 இலும் ஒலிபரப்பப்படவுள்ளது.

இந்த நேர அலேவரிசை மாற்றம் நாளே ஞாயிற்றுக்கிழமை முதல் அமுலுக்கு வரும். இத் தகவல்களே தமிழ் தமிழ் ஒலி வானெலி நேயர்மன்ற அமைப்பாளர் திரு. எஸ் உமாகாந்தன் தெரிவித்துள்ளார்.

## பரிசு பெற்றனர்

[யாழ்ப்பாணம்]

கல்லாரை குடும்ப சுகநலத் திட்டத்தினரால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பின்வருவோர் பரிசில்கள்பெற்றுள்ளனர். செல்வி. ஐ மகாலட்சுமி, திருமதி. இராதா கிருஷ்ணன், செல்வி. நா. லோகேஸ்வரி, செல்வி. மு. உருத்திர பூபதி. [மா]

## ரூபவாஹினி

மாலே

- 5-30 'வேர்ல்ட் ஒவ் ஸ்ரோறீஸ்' (ஆங்கிலம்)
- 5-45 'நியூஸ் பைடர்மேன்' (ஆங்கிலம்)
- 6-15 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
- 6-40 குழந்தைகள் பாதுகாப்பு பற்றியநிகழ்ச்சி (ஆங்கிலம்)
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 'ஜெமினிமேன்' (ஆங்கிலம்)
- 8-15 செய்திகள் (சிங்களம்)
- 8-35 நாடகம் (சிங்களம்)
- 9-05 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-50 ஸ்டார்ஸ்கி அன்ட் ஹச் (ஆங்கிலம்)
- 10-30 உலகச் செய்திகள்
- 10-35 'ஸ்டார்ஸ்கி' தொடர்ச்சி
- 10-50 நிகழ்ச்சிகள் முடிவு

# நவரத்தினம் மர்ம மரணம்:

## துப்புக்துலக்குவதில் பொலிஸார் முயற்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணேமடுக் குளக்கட்டில் அனுதரவான நிலேயில் மீட்கப்பட்டவேலணே கிழக்கைச் சேர்ந்த இளம்வர்த்தகர் பொன்னேயா நவரத்தினத்தின் சடலத்தை அவரது தந்தையான சண்முகம் பொன்னேயா அடையாளம் காட்டிஞர்

கிளிநொச்சிப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இவ்வர்த்தகரின் மரணம் தொடர்பான விசாரணேயைக் கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதவான் டபிள்யூ கார்த்திகேசு மேற்கொண்டார். பிரேத பரிசோதனேயை மாவட்ட சட்டவைத்திய அதிகாரி பி நவரத்தினராசா நடத்திஞர். மரணமானவரின் நெஞ்சுப் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சன்னம் ஒன்று மீட்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டிஞல் மரணம் சம்பவித்ததென்று சட்டவைத்திய அதிகாரி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மரணமான இளம் வர்த்தகர் நவரத்தினம் வேலணேயைச் சேர்ந்தவர் என்றும் புங்குடுதீவில் திருமணம் செய்து வசித்து வந்ததாகவும் சம்பவதினம் கிளிநொச்சிக்குக் கடன்தருமதியான சிலரிடம்காசு வாங்கிவர வந்ததாகவும் மனேவிக்கோ அன்றி உறவினர்களுக்கோ, யாரிடம் காசு பெற வந்தார் என்ற விபரம் தெரியாதெனவும் மரணவிசாரணேயில் அளிக்கப்பட்ட சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

இதேநேரத்தில் அவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது யார் என்ற மர்மம் இன்னும் துலங்கவில்லே.

கிளிநொச்சியில் கடன் கொடுக்கவேண்டிய நபர்கள்தான் இக்கொலேயைச் செய்திருக்கலாமெனப் பொலிஸ் வட்டாரங்கள் சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வர்த்தகரின் மரணத்தைத் துப்புத்துலக்கும் முயற்சியில் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. ஏ. சுகததாச, சப் இன்ஸ்பெக்டர் ஜி டி ஸ்ரனிஸ்லோஸ் சார்ஜண்டுகள் இராசசிங்கம், இராசநாயகம் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி ஈடுபட்டுள்ளது

காலஞ்சென்றவரின் மரணம் கொலே என்று பதில் நீதவான் திரு. கார்த்திகேசு தீர்ப்புவழங்கிஞர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## சிறுவர் இல்ல நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்துக்கு சட்டத்தரணி வில்வராசா தமது மனேவி திருமதி. வள்ளி நாயகி நினேவாக 1000ரூபா வழங்கியுள்ளார் அராலி கிழக்கு திருமதி. பாலசிங்கம் நினேவாக 1000 ரூபா கிடைத்துள்ளது. கோண்டாவிலேச் சேர்ந்த சி. ஆதித்தன் சிறுவர்களுக்கு உணவு வழங்க 100 ரூபாவழங்கியுள்ளார். இத் தகவல்களே சிறுவர் இல்லத் தலேவர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தெரிவித்துள்ளார்.

# நீதிமன்ற இரும்புப் பெட்டி பொலிஸாரால் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றத்தில் இருந்து கொள்ளையடித்துச் செல்லப்பட்ட இரும்புப்பெட்டியை கிளிநொச்சிப் பொலிசார் இரணைமடுக் குளக்கட்டியிலிருந்து வட்டக்கச்சிக்கு சமீபமாக மீட்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்டு மீட்கப்பட்ட இரும்புப் பெட்டி வெற்றுப் பெட்டியாகவே இருந்தது.

பெட்டிக்குள் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களும், பெரும் தொகை பணமும் இருந்ததாகத் தெரியவருகிறது.

கொள்ளைச் சம்பவத்தின் போது நீதிமன்றத்தில் இருந்த தமிழ்த்தட்டச்சு இயந்திரமும் கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வேறுசில ஸ்தாவேஜுகளும் காணாமல் போய்விட்டதாகவும் தெரியவந்தது.

## புதிய நிர்வாகிகள்

[வேலணை]

புங்குடுதீவு வீராமலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. பின் வருவோர்கள் நடப்பாண்டு உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு.சு. வீரசிங்கம் உப தலைவர்களாக திருவாளர்கள்:- க. தில்லைநாதன், சு. கதிரவேலு, செயலாளராக:- திரு. சி. செல்வரத்தினம் உப செயலாளராக திரு. வை. புண்ணியமூர்த்தி பொருளாளர்:- திரு. இ. சோமசுந்தரம்.

## அகில இலங்கை விளையாட்டுப் போட்டி

[வவனியா]

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியிலான விளையாட்டுப்போட்டியில் பங்கு பற்ற வவனியா மாவட்டத்திலிருந்து27 போட்டியாளர்கள் குருநாகலுக்கு சென்று திரும்பியுள்ளார்கள்.

இவர்களுடன் இப் பகுதியைச் சேர்ந்த நான்கு விளையாட்டு அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவு, சிங்களப்பிரிவு, செட்டிகுளம், நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தே போட்டியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலிடம் பெற்றார்

[வேலணை]

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கந்தையா சண்முகம்பிள்ளை 1984 ம் வருடத்தில் யாழ் மாவட்ட ரீதியில் நடைபெற்ற பின்வரும் விளையாட்டுப்போட்டிகளில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டனர். 26 மையில் மரதன் ஓட்டம், 10,000 மீட்டர் ஓட்டம், 5000 மீட்டர் ஓட்டம், 1500 மீட்டர் ஓட்டம் ஆகியவற்றில் முதலாம் இடத்தைப்பெற்ற இவர் 10,000மீட்டர் ஓட்டப் போட்டியிலும் புதிய சாதனையொன்றையும் நிலைநாட்டியுள்ளார்.

சென்ற மாதம் 29 திகதி கொழும்பில் நடைபெற்ற தேசிய மரதன் விளையாட்டுப் போட்டியிலும் பங்குகொண்டு வெற்றியீட்டியுள்ளார்.

## பாதுகாப்புக் குழு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து பதினெட்டுப்பேர் கொண்ட பாதுகாப்புக்குழு மாவட்ட வைத்திய அத்தியட்சர் திரு எஸ் மாணிக்கம் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்டது. இதில் பெரும்பாலான பிரதிநிதிகள் இளைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடபகுதி விஜயம்

(வவனியா)

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும், அகதிகள் புனருத்தரான அமைச்சின் செயலாளருமான றியல் அட்மிரல் ஏ. டபிள்யூ. எச். பெரேரமுல்லைத்தீவு, கிளிநொச்சி பகுதிகளுக்கு அன்மையில் விஜயம் செய்தருந்தார்.

அகதிகளுடைய குடியேற்றம் தொடர்பாக இப் பகுதியிலுள்ள முக்கிய அதிகாரிகளுடன் கலந்துரையாடிய இவர் இலங்கை பிரசைகள் அல்லாத அகதிகளுக்கு தனியார் காணிகளில் குடியமர்த்துவது தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்தார்.

இலங்கை பிரஜைகளான அகதிகளுக்கு கிளிநொச்சியிலேயே குடியமர்த்தவும், அரச காணிகளையே இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் கூறியதாக வவனியாசர்வோதய மாவட்ட இணைப்பாளர் திரு.க.கதிரமலை தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச அதிபரின் இல்லத்தில் நடந்த கலந்துரையாடலில் வை. எம். சி ஏ. பிரதிநிதிகள், அருட்திரு. வண. பயஸ் அடிகள், சர்வோதய பிரதிநிதிகள் கிளிநொச்சி அரச அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஆலய உற்சவம்

(பண்டத்தரிப்பு)

தற்போதைய சூழ்நிலையால் சங்கானை கிழக்கு பிரான்பற்று முருகமூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை மிகவும் அமைதியான முறை நடத்துவது என்று கோவில் பரிபாலன சபை தீர்மானித்ததைத் தொடர்ந்து கோவில் உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் அமைதியானமுறையில் ஆரம்பமானது.

# யாழ்ப்பாணத்திலும் இப்பரீட்சை நடைபெறும்

[கொழும்புத்துறை]

பொது எழுது வினைஞர் சேவையின் 2 ம் வகுப்பின் 'அ' பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட உள்ளது.

அக்டோபர்மாதம் 6ம் திகதி நடைபெறும் இப் பரீட்சை யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களில் நடாத்தப்படுமென்று அரசாங்க சேவை அதிகாரசபை அறிவித்துள்ளது.

பிற சேவைகளிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வாய்மொழிப்பரீட்சை கொழும்பில் மட்டும் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## பணிப்பாளர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறைகளிலும், பனைவள அபிவிருத்தி த்துறையிலும் நீண்டகாலமாக ஈடுபட்டு உழைத்து வருபவராவார்.

பத்திரிகையாளராக நீண்டகாலம் பணியாற்றி வருபவர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Shanthi (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color
(Action Thrilling Suspense)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரவிச்சந்திரன் ராஜஸ்ரீ
உத்தரவின்றி உள்ளே வா

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,6-30
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
என் அண்ணன்

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம். ஜி. ஆர். - லதா
நம்பியார்
பல்லாண்டு வாழ்க
(புத்தம் புதிய பிரதி-கலர்)

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-00,4-30
எம் ஜி ஆர். - ஜெயலலிதா
நம்பியார்
அன்னமிட்டகை
[புதிய பிரதி]

குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணம்மா
மனோகரா
(புதிய பிரதி)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30, 6-30
Rex Harrison..
Darmendra..
Zeenath Aman..
in
SHALIMAR
Action-Packed-
English Movie

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30 6-30,
யாருக்காக அழுதான்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30. 6-30
எஸ். எஸ். ஆர் - விஜயகுமாரி
நீங்காத நினைவு
[புதிய பிரதி]

ST. JOHN'S COLLEGE
JAFFNA.

DIPLOMA COURSE IN AUTOMOBILE ENGINEERING

Few vacancies exist in Automobile Engineering class. (First year)

Students with passes in English and Mathematics in G.C.E. (O/L) may apply. Preference will be given to those who have completed the Advanced Level Course.

Applications close on 10.9.1984. PRINCIPAL.
1533

## பிறந்ததின வாழ்த்து

வல்வெட்டியைச் சேர்ந்த தர்மசேகரம் — அருந்தவமலர் தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**விஜிந்தன்**

தனது முதலாவது பிறந்ததினத்தை வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். விஜிந்தனை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மா, மாலா அன்ரி, அருள் மாமா, தீசன் சித்தப்பா, சேகர் அத்தான், சுதாகர் அத்தான், ஜெயா மச்சாள், அபுதாபி அத்தான், முல்லைத்தீவு அத்தான், சக்தி அத்தான், கொற்றாவத்தை, பிரதீனு, பிரதீப் மற்றும் பெரியப்பா குடும்பத்தினர், உற்றார், உறவினர் துர்க்காதேவி அருள்பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (1544)

சத்தியா அன் கோ அடைவு நிலையம்

இடமாற்றம்

151, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணத்திலுள்ள எமது ஸ்தாபனம்
5-9-1984 புதன்கிழமை தொடக்கம்

இல. 22, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்திற்கு மாற்றப்படவுள்ளது என்பதைப் பணிவுடன் அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
திருமதி வ. வேலும்மயிலும்,
உரிமையாளர். (1537)

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி பாக்கியம் சிதம்பரப்பிள்ளை



மலர்வு:
12-09-1914

உதிர்வு:
13-09-1983

அன்புத்தெய்வமே! நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள் என்றென்றும் எம்மைவிட்டு அகலாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்
தங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்

'தலக்கோட்டம்',
மண்டைதீவு-2. 1450

வெளிநாட்டில்
வேலைவாய்ப்புகளுக்கு
ஏற்ற சிறந்த குறுகிய கால
பயிற்சி வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

★ DIPLOMA IN HOTEL MANAGEMENT
[யாழ்நகரில் முன்னணி HOTELகளில் செய்முறைப்பயிற்சி]
காலம் 3 மாதம் கட்டணம் 1500/-
ஆரம்பம்: 10-09-84

★ NURSING AIDES [செய்முறைப் பயிற்சியும் உட்பட]
காலம் 6 மாதம் கட்டணம் 1750/-
ஆரம்பம்: 09-09-84

★ SHORT HAND AND TYPING-NEWCOURSE IN PITMAN'S LONDON
G. C. E. (O/L) DEC. கட்டணம் 55/-
ஆரம்பம்: 12-09-84

★ COMPUTER PROGRAMMING
உளச்சார்பு பரீட்சை 06-09-84 காலை 9 மணிக்கு
பரீட்சைக் கட்டணம் 10/-

தொடர்பு:
Comteck Computer Institute,
(ஆஸ்பத்திரி வீதி - 3-ம் குறுக்குத்தெரு சந்திக்கு அருகாமையில்)
14, ST, PETERS LANE, JAFFNA.
T-Phone: 24355

# 600 விவசாயிகள் பாதிப்பு

(கொழும்புத்துறை)

அச்சுவேலி தீவைப்புச் சம்பவங்களினால் 600 விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத அவலநிலைக்கு ஆளாகியுள்ளனர்.

பத்தைமேனி, இடைக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளே பாதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

தீவைப்புச் சம்பவத்தின் போது பத்தைமேனிப் பகுதிப் பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் காரியாலயமும் தீக்கு இரையானதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தீக்கிரையான பயிர்ச்செய்கை உத்தியோகத்தரின் காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த பத்தைமேனி இடைக்காடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 600 விவசாயிகளுக்கான கமநலச் சேவைத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ கமக்காரர் அடையாள அட்டைகளும் இவ்விவசாயிகளினால் விதை உருளைக் கிழங்கு கோரிச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பப் படிவங்களும் எரிந்து சாம்பராகி விட்டன.

இதன் எதிரொலியாக இவ் விவசாயிகள் விவசாயம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலும், விவசாயக் கடன்களுக்கு விண்ணப்பிக்க முடியாமலும் கஷ்டமடைந்துள்ளனர். தமது கமக்காரர் அடையாள அட்டைகளும், விதை உருளைக்கிழங்கிற்கான விண்ணப்பப் படிவங்களும் தீக்கிரையாகிவிட்டதால் இவ்வருடம் தாம் விதை உருளைக்கிழங்கைப் பெறமுடியாத நிலை ஏற்படுமோ என்று 600 விவசாயிகளும் கவலையடைந்துள்ளனர்.

குறிப்பிட்ட விவசாயிகள் தமது அவலநிலைகுறித்து யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடமும், யாழ். மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கத்திடமும் முறையிட்டுள்ளனர்.

## பாடசாலை மாணவர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாவி மாணவர்களை உடனடியாக விடுதலைசெய்' என்ற கோரிக்கையை முன்வைத்தே மாணவர்கள் நேற்று ஒரு நாள் அடையாள பகிஷ்கரிப்பை நடாத்தியிருந்தனர்.

பாடசாலை மாணவர்கள் ஏன் வகுப்புகளைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று விளக்கம் தெரிவித்து யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரியும் மானிப்பாயிலுள்ள பிரபல கல்லூரியும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டிருந்தது தெரிந்ததே அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரன் கடந்த ஜூலை 20-ம் திகதி கைது செய்யப்பட்டு விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

''யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சந்திரசேகரம் தவபாலனை கடந்த 28-ம் திகதி கைது செய்து விசாரணை செய்தபின்னர் அடையாள அட்டை கிழிக்கப்பட்டு பலத்த காயங்களுடன் அவரறியாத இடத்தில் விடுவிக்கப்பட்டார். இதன் தொடர்பாக யாழ். மத்தியகல்லூரியின் 6-ம் தர மாணவர்கள் மூவர் ரோந்துப் படையினரால் ஏற்றிச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

''இந்த நடவடிக்கையானது பல்கலைக்கழக மாணவர்களிலிருந்து பாலர் வகுப்பு மாணவர்கள் வரை நீடித்துச் செல்லுகின்றது. தமிழ் மாணவர்களின் கல்வியைச் சிதைப்பதற்கு நடக்கும் ஒரு முயற்சி இது. ஆகவே கைதுசெய்யப்பட்ட மாணவனை விடுதலை செய்யும்படி அரசைக்கோரி, ஒருநாள் பகிஷ்கரிப்பை நடாத்துகின்றோம்.

'தமிழ் மாணவ சமுதாயத்தைப் பாதுகாக்கும்படி அரசைக் கோருகின்றோம்'.

'பாடசாலைகளின் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் மாணவர்களாகிய எமக்குப் பாதுகாப்புத் தேடித்தரவேண்டும்'.

இது சம்பந்தப்பட்ட அறிக்கைகளை யாழ். பிரஜைகள் குழு, யாழ். அரசாங்க அதிபர், பாடசாலைகளின் அதிபர்கள், யாழ். கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைத்துள்ளதாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் நேற்றைய பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக வகுப்புக்கள் நடைபெறவிருந்த யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் விரிவுரைகளைப் பகிஷ்க்கரித்ததாக, பல்கலைக் கழக நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பகிஷ்க்கரிப்பில் ஈடுபட்டிருந்த சில கல்லூரி மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்திருக்கக் காணப்பட்ட போதிலும், எதுவித அசம்பாவித சம்பவங்களும் இடம்பெறவில்லை எனத் தெரியவந்துள்ளது.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாததால் இ.போ.ச பஸ்களிலும் மினிபஸ்களிலும் பிரயாணிகள் தொகை குறைவாகக் காணப்பட்டனர்.

தனியார் கல்வி நிறுவனங்களும் நேற்று முழுநாளும் மூடப்பட்டிருந்தன.

### பழைய மாணவர் கண்டனம்

''மாணவர்கள் பாடசாலைகளுக்குப் பாதுகாப்பாகச் சென்று திரும்பும் வகையில் இராணுவத்தினரை வடகுக் கிழக்கு மாகாணங்களிலிருந்து வாபஸ்பெற்றுக்கொள்ளவும்'' என்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தீர்மானமொன்றின் மூலம் கேட்டுள்ளது.

இச் சங்கத்தின் விசேட செயற்குழுக் கூட்டமொன்று நேற்று மாலை 5 மணிக்கு இடம் பெற்றது.

கடந்த 28ந் திகதி காலை தனது இல்லத்திலிருந்து துவிச்சக்கர வண்டியில்பாடசலைக்கு வந்து கொண்டிருந் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சந்திரசேகரன் தவபாலன் (வயது 17) இராணுவத்தினரால் தாக்கப்பட்டதை வன்மையாகக் கண்டித்தும் இச் சங்கம் தீர்மானமொன்றை எடுத்தது.

மாணவன் தவபாலன் மீது தாக்குதல் நடத்தியோரைக் கண்டிக்கும்படியும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கோரியுள்ளதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மணவர்களுக்கு இடையூறு தராத வகையில் பாதுகாப்புப் படைகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும் தனது தீர்மானத்தில் கோரியுள்ளது. (க)


## மரண அறிவித்தல்

### முத்தம்மா சந்தியாப்பிள்ளை

முத்தம்மா சந்தியாப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற D. M. சந்தியாப்பிள்ளையின் அன்பு மனைவியும், இரத்தின றேஸ் (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), S. X. ஞானசேகரம் (கணக்காளர், சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்), S.M கிறிஸ்ரி (நிதி அமைச்சு, பாறேன்), ஜொய்ஸ் (ஆசிரியை, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தாயாரும், P. E. அந்தோனிப்பிள்ளை, A. தியோப்பிலஸ் (பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஏறுவூர்) பிறிஜட் இராஜசூரியர் அவர்களின் அன்புப் பெரிய தாயாரும், A. வரப்பிரகாசம் (ஆசிரியர்) சித்திரா, வசந்தி, A. C. T. இராசையா (இலங்கை வங்கி மாவட்டக் காரியாலயம், அநுராதபுரம்) அவர்களின் மாமியாரும் V. S. மனுவேல்பிள்ளை, காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற A. T. அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற A. T. அலோசியஸ் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவர்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 4 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

1554

## மரண அறிவித்தல்

### வண்/ கலட்டி அம்மன் கோவிலடி

### க. ஜெயராசசிங்கம்

### காலமானார்

அமரரான பிரபல வர்த்தகர் வே.கந்தையாவினதும் அன்னம்மாவினதும் மகனான வர்த்தகர் ஜெயராசசிங்கம் காலமானார். அன்னார் சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி (யா/ இந்து மகளிர் கல்லூரி)கலைவாணி, கலைச்செல்வன், கலையரசன், கலையரசி, சிவச்செல்வன், ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார் யோகரத்தினம், மகேஸ்வரி, அதிபர் கந்தசாமி (புதுமைலோன்), தங்கேஸ்வரி, குணராசா (செங்கை ஆழியான்) (உதவிஅரசாங்கஅதிபர் கச்சேரி கிளிநொச்சி) ஆகியோரின் அருமைச் சகோதரரும், சிவானந்தம் அவர்களின் மருமகனும், வர்த்தகர் நடராசா, அமரரான ஆசிரியர் சபாரத்தினம், இரத்தினம் (சிறைப் பாதுகாவலர் யாழ்ப்பாணம்), கனகமணி (ஆசிரியை ஏழாலை தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை), கமலாம்பிகை (ஆசிரியை, யாழ் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 71/10 A கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாண இல்லத்திலிருந்து, இன்று 1-9-84 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்குக் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 1543


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## பிரேமானந்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைபவங்களில் கலந்துகொண்டு, இன்று பிற்பகலுக்குப் பின்னர் நல்லூர் இந்து விடுதியில் தங்கியிருப்பார்.

நாளைக் காலை பத்து மணி முதல் மாலை நான்கு மணி வரை சுன்னாகத்திலுள்ள ஆசிரமத்தில் நடைபெறும். பஜனை நிகழ்ச்சிகளில் சுவாமிகள் கலந்து கொள்வார்.

## உயர்நிலை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராமத்துக்குச் சென்ற உயர்நிலை மாணவர் ஒன்றியத்தினர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று அரிசி, சீனி, மா, பருப்பு ஆகியவற்றையும் மற்றும் உடுபுடைவைகளையும் வழங்கியதாகவும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதி தெரிவித்தார்.

கரணவாயில் அண்மையில் இடம்பெற்ற தீவைப்புச் சம்பவத்தில் குடிசைகளை இழந்தவர்களுக்கு குடியிருக்க வசதி செய்து கொடுக்கும் நடவடிக்கைகளில் உயர்நிலை மாணவர் ஒன்றியம் முயற்சி எடுத்து வருவதாகவும் அப்பிரதிநிதி சொன்னார். (மா)

## தனிநாயகம் அடிகளார் நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தனிநாயகம் அடிகளாரின் ஞாபகார்த்தக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரியில் யாழ். ஆயர் ரி. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் தென்னிந்தியத் திருச்சபை ஆயர் டி. ஜே. அம்பலவாணர், ஜே. ரி. சேவியர், பேராசிரியர் வேலுப்பிள்ளை, திரு. கே. நேசையா, திரு. சொக்கலிங்கம் ஆகியோர் சிறப்புரை யாற்றுவார்கள்.

இன்றைய வைபவத்தில் அடிகளாரைப்பற்றி பிற நாட்டு அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய ''தமிழாரம்'' நூலும் வெளியிடப்படும்.

## 4 தொகுதிகளில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உறுப்பினர்களும் அரசியலமைப்பின் ஆறுவது திருத்தச் சட்டத்துக்கமைய சத்தியப் பிரமாணம் எடுக்காததால் தமது பதவிகளை இழந்தனர். மின்னேரியா, குண்டசாலை ஆகிய தொகுதிகளில் அவற்றின் உறுப்பினர்கள் காலமானதால் இடைத்தேர்தல் இடம் பெறுகிறது.

திருகோணமலை, பட்டிருப்புத் தொகுதிகளில் போட்டியிடுவது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அடுத்த வாரம் ஆலோசனை நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. இவ்விருதொகுதிகளும் முலனர் இக் கட்சிகளின் உறுப்பினர்களாலேயே பிரதிநிதித்துவம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (கி

## வெங்கட்ராமன்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதவிக்கான வேட்பாளராக திரு, ஆர். வெங்கட்ராமன் நிறுத்தப்பட்டு உப ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரை எதிர்த்து சகல எதிர்க்கட்சிகளிலும் சார்பில் திரு. பி. சி. சாம்ப்ளே போட்டியிட்டார். (கி)

## யாழ்ப்பாணத்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தபால் கந்தோரிலும் ஒரு தொகைப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து சங்கக் கிளைகளும் தபாலகமும் மூடப்பட்டுள்ளன.

### சுன்னாகத்தில்

நமது ஊரெழு நிருபர் அறிவிப்பதாவது:

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இரண்டு கிளை நிலையங்களில் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் அவ்விடத்திற்குவந்த நான்கு இளைஞர்கள் சங்கத்தின் விற்பனை நிலைய முகாமையாளர்களைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி மேசை லாச்சிக்குள்ளே வைக்கப்பட்டிருந்த பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

முதலாம் இலக்க விற்பனை நிலையத்தில் 125 ரூபா 71சதமும், 17ம் இலக்க விற்பனை நிலையத்தில் 1098 ரூபா 19சதமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1ம் இலக்கக் கிளை நிலையம் சங்கத் தலைமை அலுவலகத்தின் கட்டிடத்திலேயே இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

### கோண்டாவிலில்

நமது அலுவலக நிருபர் எழுதுவது:

தனியார் விறகுகாலை ஒன்றிலிருந்து பணம்வைக்கும் இரும்புப் பெட்டி கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை யடிக்கப்பட்ட இரும்புப் பெட்டிக்குள் சுமார் 42 ஆயிரம் ரூபாவுக்கு மேல் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் கோண்டாவிலிலுள்ள வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை டிப்போவுக்கு முன்பாக உள்ள விறகுகாலையிலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றது.

இனந்தெரியாத கோஷ்டியினர் வானொன்றில் சென்று கொள்ளையடித்தனராம்.

விறகுகாலைக் காவலாளியைத் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தித் தடுத்துவைத்துக்கொண்டு மனேஜரின் அறையை உடைத்து அங்கு வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியைத் தூக்கி வானில் ஏற்றிக்கொண்டு தலைமறைவாகிவிட்டதாகவும், அக் கோஷ்டியினர் செல்வதற்கு முன்னர் இரு கைக்குண்டுகளை வீசியதாகவும் யாழ். பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஆரியகுளம் சந்திக்கருகாமையில் ஒரு இரும்புப்பெட்டி துண்டு துண்டாகக் கிடந்ததாகவும், மேற்படி விறகுகாலையில் கொள்ளையடிக்கப்பட்ட இரும்புப்பெட்டியாக இது இருக்கலாமென்றும் கருதப்படுகிறது.

## தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் பால்களை விநியோகிக்கும் ஊழியரான எஸ். மகாலிங்கம் (31 வயது) என்பவர் தாக்குதலுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரோந்துப் படையினர் ஆனைக்கோட்டையில் வைத்து தம்மை தடுத்து தாக்கியதாகத் தெரிவித்தார் என்று ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்துள்ளது.